
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 09.09.2024 திங்கட்கிழமை இதழ் : 252 பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# ஐ. நா. மனித உரிமை பேரவை கூட்டத்தொடர் இன்று ஆரம்பம்!

## இலங்கைக்கு மீண்டும் காலநீடிப்பு?

ஜெனிவா, செப். 09


**ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட்டத்தொடர் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. முதல் நாளிலேயே இலங்கை விவகாரம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இதனிடையே, இலங்கை தொடர்பான 51/1 தீர்மானத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிப்பதற்கு வாய்ப்பு உள்ளதாக அறிய கிடைக்கின்றது.**

ஜெனிவாவில் இன்றைய தினம் ஆரம்பமாகும் கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் மதியம் 12.30 மணிக்கு பின்னர் நடைபெறும். இதேசமயம், பிற்பகல் 5 மணிக்கு இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடும் பக்க நிகழ்வும் நடைபெறவுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணையாளரின் விரிவான எழுத்துமூல அறிக்கை ஏற்கனவே, வெளியிடப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டே பிரதான அமர்வில் இன்றையதினம் விவாதம் நடைபெறவுள்ளது.

இலங்கை தொடர்பாக ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தின் ஆயுட்காலம்

11



## பொதுவேட்பாளரின் கூட்டத்தில் பெருந்திரளாக பங்கேற்ற மக்கள்!

வவுனியா, செப். 09

தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்து நேற்று நடந்த பரப்புரை கூட்டத்தில் பெருந்திரளாக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் சார்பில் சங்கு சின்னத்தில் தமிழ்ப் பொது வேட்பாளராக பா. அரியநேத்திரன் போட்டியிடுகிறார்.

அவரை ஆதரித்து வவுனியா - குருமண்காடு கலைமகள் சனசமூக நிலைய மைதானத்தில்

11

## உலகின் பிரதான சுற்றுலா தளமாக மட்டக்களப்பை நாம் மாற்றுவோம்!

### ஜனாதிபதி ரணில் உறுதி




மட்டக்களப்பு, செப். 09

வாகரை தொடக்கம் காத்தான்குடி வரையில் பெரும் சுற்றுலா வலயத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். மட்டக்களப்பு உலகின் பிரதான சுற்றுலா பிரதேசமாக மாறும் - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு - கல்குடாவில் நேற்று

11

## தென்னிலங்கையருக்கான வாக்கு எம் தலையில் நாமே போடும் மண்!

### தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரன்

- கோகுலன் -

வவுனியா, செப். 09

"தென்னிலங்கையின் மூன்று ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் அளிக்கின்ற வாக்கானது எமது தலையில் மண்ணை நாமே அள்ளிக் கொட்டுவதற்கு சமமாகவே இருக்கும் என்பதற்கு மாற்றுக் கருத்து இல்லை", என்று தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று நடந்த தேர்தல் பரப்புரை கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

11

## மட்டக்களப்பு அதிகாரம் பெற ரணில் வெற்றிபெறவேண்டும்!

### பிள்ளையான் தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப். 09

எமது மாவட்டத்துக்கான அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முதல்கட்டமாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியை வெற்றிபெறச் செய்ய வேண்டும் - என்று பிள்ளையான் என்று அறியப்பட்ட சி. சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஜனாதிபதி ரணிலை ஆதரித்து கல்குடாவில் நடந்த பரப்புரை கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சுவாமி விபுலானந்தர் அரசியல் அதிகாரம் பெற வழிகாட்டியாக இருந்துள்ளார்.

11




## 'வீரர்களின் போர்' துடுப்பாட்டம் சமநிலையில் நிறைவடைந்தது!

யாழ்ப்பாணம், செப். 09

வீரர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி - தெல்லிப்பழை மகாஜன கல்லூரிகளின் பெருந்துடுப்பாட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

22ஆவது வீரர்களின் போர் பெருந்துடுப்பாட்டப் போட்டி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மகாஜன கல்லூரி அணித் தலைவர் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

11

## தமிழ் மக்களின் ஒற்றுமையை வெளிக்காட்டும் சந்தர்ப்பம் இது

### செல்வம் அடைக்கலநாதன் எம். பி.

வவுனியா, செப். 09

நாம் ஒற்றுமையாக இருக்கிறோம் என்பதை காட்டும் சந்தர்ப்பமே இந்த ஜனாதிபதித் தேர்தல். அதனை வெளிப்படுத்தவே தமிழ்ப் பொது வேட்பாளர். அவருக்கு அளிக்கும் ஆதரவே நாம் ஒரு தனி இனம் - தேசிய இனம் - ஒன்றாக இருக்கிறோம் என்பதை உலகத்துக்கு வெளிப்படுத்தும் செய்தி. இதனை எல்லோரும் சேர்ந்து உருவாக்க வேண்டும் - இவ்வாறு ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்து நேற்று நடந்த பரப்புரை கூட்டத்தில்

11

## அநுரகுமார அரசமைப்பை உருவாக்க இடமளியோம்!

### விமல் வீரவன்ஸ சொல்கிறார்

கொழும்பு, செப். 09

ஒருமித்த நாடு என்ற புதிய அரசமைப்பை உருவாக்குவதாக ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தனது கொள்கை பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளார். நாட்டுக்கு எதிரான செயல்பாடுகளுக்கு ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லை என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

11

## போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்க செய்துள்ளேன்!

### விஜயதாஸ ராஜபக்ஷ

கொழும்பு, செப். 09

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு நியாயத்தை பெற்றுக் கொடுக்க சட்டத்தின் மூலம் உரிய நடவடிக்கைகளை உருவாக்கியுள்ளேன். தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த நிலையான திட்டங்களை செயல்படுத்துவேன் - இவ்வாறு தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தெரிவானதும் பாராளுமன்றம் கூட்டப்படும்

கொழும்பு, செப். 09

ஜனாதிபதி தெரிவின் பின்னரே இனி பாராளுமன்றம் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 4, 5ஆம் திகதிகளில் பாராளுமன்றம் கூடியிருந்தது. இதைத் தொடர்ந்து ஒக்ரோபர் 8ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் என்று தெரிவிப்பட்டது.

எனினும், எதிர்வரும் 21ஆம் திகதி நடக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தெரிவாகும் ஜனாதிபதி எந்த நேரத்திலும் பாராளுமன்றத்தை கூட்டமுடியும். அதற்கான அதிகாரம் அவருக்கு உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கணவனை இரும்பு கம்பியால் அடித்துக் கொன்ற மனைவி!

கண்டி, செப். 09

குடும்பத் தகராறில் கணவனை இரும்புக் கம்பியால் அடித்து கொலை செய்த மனைவியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கண்டி - தெல்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடகம்மெத்த பகுதியில் இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் 62 வயது நபரே உயிரிழந்தார்.

இருவரும் அடிக்கடி தகராறில் ஈடுபட்டு வந்துள்ளனர். இந்த நிலையில், நேற்றுமுன்தினம் ஏற்பட்ட தகராறு கைகலப்பாக மாறி கொலையில் முடிந்துள்ளது.

சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# துப்பாக்கிகளுடன் இருவர் கைதாகினர்

கொழும்பு, செப். 09

உள்நாட்டு துப்பாக்கி மற்றும் கஞ்சாவுடன் இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொனராகலை - குடா ஓயா பகுதியில் விசேட அதிரடிப் படையினர் நடத்திய சுற்றிவளைப்பிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் ஊவகொடா ஓயாவைச் சேர்ந்த 34 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை குடாஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, அம்பாறை - பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்கந்தவை அண்மித்த பகுதியில் உள்நாட்டு துப்பாக்கியை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

கைதானவர் 30 வயது நபராவார். மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# போதைப்பொருட்களுடன் 652 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, செப். 09

நாட்டில் நேற்று நள்ளிரவு வரையான 24 மணி நேரத்தில் போதைப்பொருள் குற்றம் சார்ந்து 652 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானவர்களில் 9 பெண்களும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், கைதானவர்களில் 8 பேர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இதில், போதைப்பொருளுக்கு அடிமையான இருவரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 119 கிராம் ஹெரோயின், 262 கிராம் ஐஸ், 179 கிலோ கஞ்சா முதலான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன. (ஐ)

# ரயில் பயணிகளின் சொத்துகளை திருடியவர் பொலிஸாரால் கைது

## மடிக்கணினிகள், தொலைபேசிகள் மீட்பு

களுத்துறை, செப். 09

களுத்துறையில் பேருந்து மற்றும் ரயில்களில் பயணித்த பயணிகளின் சொத்துகளை திருடிய குற்றத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் களுத்துறை வடக்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் களுத்துறை தெற்குப் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் ஆவார்.

இவரிடமிருந்து களுத்துறை வடக்கு மற்றும் அளுத்கம பொலிஸ் பிரிவுகளில் திருடப்பட்ட இரண்டு மடிக்கணினிகளும், வேறு பகுதிகளிலிருந்து திருடப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 03 மடிக்கணினிகளும் 02 கையடக்கத் தொலைபேசிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை களுத்துறை வடக்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மன்னார் இளைஞர் கட்டுநாயக்காவில் நேற்று கைது!

கொழும்பு, செப்.09

டுபாயிலிருந்து சட்ட விரோதமாக சிகரெட்களை கொண்டு வந்த மன்னார் இளைஞர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்று கைது செய்யப்பட்டார்.

கட்டுநாயக்கா விமான நிலைய பொலிஸ் அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மன்னாரை சேர்ந்த 30 வயதுடையவராவார். அவரிடமிருந்து 14,000 சட்ட விரோத சிகரெட்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# வெவ்வேறு விபத்துகளில் நால்வர் உயிரிழந்தனர்!

கொழும்பு, செப். 09

நாட்டின் வெவ்வேறு இடங் களில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற விபத்துகளில் நால்வர் உயிரிழந்தனர்.

புத்தளம் - முந்தலில், சிலா பம் - புத்தளம் வீதியில் பாத சாரி ஒருவரை கார் மோதி விட்டு தப்பியோடியது. இதில், 37 வயது நபர் உயிரிழந்தார்.

குருநாகல் - வாரியபொலவில், புத்தளம் வீதியில் இ. போ. ச. பேருந்தும் தனியார் பேருந்தும் மோதி விபத்துக்கு உள்ளாகின. இதில், இ. போ. ச. பேருந்தின் மிதிபலகையில் பயணித்தவர் உயிரிழந்தார். மற்றொருவர் உயிரிழந்தார்.

குருநாகல் - பொத்துஹெரவில், கொழும்பு - குருநாகல் வீதியில் கார் - மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் 30 வயது இளைஞர் உயிரிழந்தார்.

மொனராகலை - வெல்லவா யவில் லொறியும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் 52 வயது நபர் உயிரிழந்தார். (ஐ)

# அநுரகுமாரவுக்கு ஆதரவாக கிளிநொச்சியில் பிரசாரம்

கிளிநொச்சி, செப். 09

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்கவுக்கு ஆதரவாக அந்தக்கட்சியின் வங்கி மற்றும் நிதி தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நேற்று கிளிநொச்சியில் பிரசார பணிகளை ஆரம்பித்தனர்.

தொண்டமான் நகரில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் கட்சி அலுவலகத்திலிருந்து பிரசார பணிகளை அவர்கள் ஆரம்பித்தனர்.

குறித்த பிரசார நடவடிக்கையில் வங்கி மற்றும் நிதி தொழிற்சங்க இணைப்பாளர் சமீர அல்விஸ் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# ஆயித்தியமலை தூய சதா சகாய அன்னையின் திருவிழா நிறைவு



மட்டக்களப்பு, செப். 09

ஆயித்தியமலை தூய சதா சகாய அன்னை திருத்தலத்தின் 70ஆவது வருடாந்த திருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, கொடியிறக்கத்துடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை நிறைவுபெற்றது.

கடந்த 30ஆம் திகதி, ஆலய பங்குத் தந்தை வின்சென்ட் ஜெரிஸ்டன் அடிகளார் தலைமையில், கொடியேற்றம் நடைபெற்றது. தொடர்ந்து, தினமும் திருச் செபமாலை, மறைவுரைகள் மற்றும் திருப்பலி என்பன நடைபெற்றன.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் பேராலயம் மற்றும் செங்கலடி புனித நிகோலஸ் ஆலயத்திலிருந்து அன்னையின் திருத்தலத்தை, பாதயாத்திரையாக மக்கள் சென்றடைந்து வழிபட்டனர்.

தொடர்ந்து, மாலை மறைவுரை, நற்கருணை வழிபாடு இடம்பெற்று திருச்சொரூப பவனி, விசேட திருப்பலி என்பன நடைபெற்றன.

நேற்று காலை மட்டக்களப்பு மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில், திருவிழா திருப்பலி கூட்டாக ஒப்புக் கொடுக் கப்பட்டது. தொடர்ந்து, திருச்சொரூப பவனி, திருச்சொரூப ஆசீர்வாதமும் நடைபெற்று, கொடியிறக்கத்துடன் திருவிழா நிறைவுபெற்றது. (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
09.09.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், ஆவணி 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சுயவிருப்பு - சுயநல அரசியல்!

ஈழத்தமிழர் அரசியல் ஆயுதப் போராட்டமாக நீட்சிகொண்ட காலத்திலிருந்து உள்முரண்பாடுகளும் - குத்து வெட்டுக்களும் ஒட்டிப்பிறந்த குழந்தையாகவே இருந்தது. இறுதியில் ஒருவரை ஒருவர் அழித்தொழிக்கும் உள்மோதலாக விரிவுகொண்டது. இதில், அந்த இயக்கம் - இந்த இயக்கம் என்னும் பாகுபாடுகள் இன்றி ஒருவரையொருவர் கொன்று கொண்ட வரலாறு ஏடுகளில் பதிவாகியிருக்கின்றது.

இன்றும் அதன் எச்சசொச்சங்கள் அரசியலை ஆக்கிரமித்துத்தான் இருக்கின்றன. ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டிருக்கும் நிலையில், வெற்றிக்காக ஒன்றுபட்டு உழைக்க வேண்டிய சூழலில்கூட இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுவில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. இது எதனைக் காண்பிக்கின்றது?

இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஒற்றுமைக்கு எதிராக செயல்படுகின்றதா? ஒற்றுமையை சீர்குலைக்கும் ஒரு கோடரி காம்பாக அந்தக் கட்சி மாறிவிட்டதா? இதுவரையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்னும் பெயரில் இயங்கிவரும் சைக்கிள் அணியினர் மட்டும்தான் ஒற்றுமையை சீர்குலைக்கும் கோடரி காம்பாக இருந்தனர். இப்போது அவர்களுடன் தமிழ் அரசுக் கட்சியும் இணைந்திருக்கின்றது.

இன்று நிலைமைகள் மோசமடைந்து செல்கின்றன. இந்த நிலைமை தொடர்ந்தால் தமிழ்த் தேசிய அரசியல் என்று ஓர் அடையாளமே இருக்கப் போவதில்லை. கிழக்கு மாகாணம் தமிழ் மக்களின் பிடியிலிருந்து பறிபோய்க் கொண்டிருக்கின்றது - பெருமளவு பறிபோய்விட்டது. திருகோணமலை - அம்பாறை மாவட்டங்களில் தமிழ் மக்களின் வசம் எதுவுமில்லை என்னும் நிலைமை தெளிவாகவே தெரிகின்றது.

கிழக்குத் தமிழர்களின் அரசியல் இருப்பை பலப்படுத்துவதற்கான பிரத்தியேகத் திட்டங்கள் எதுவும் தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகள் என்போரிடம் இல்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் கிழக்கினதும் வடக்கினதும் கூட்டுச்செயலை ஊக்குவிக்கும் நோக்கில் கிழக்கிலிருந்து ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டிருக்கின்றார்.

உண்மையில், கிழக்கு மாகாணத்தில் அனைவரும் ஓரணியாக இருக்கக்கூடிய அரசியல் கட்டமைப்பு ஒன்றே தேவையானது. ஆனால், அதனை நடைமுறைப்படுத்தும் முயற்சியில் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகள் ஒன்றிணையவில்லை. முக்கியமாக அனைத்து ஒற்றுமை முயற்சிகளையும் முதலில் எதிர்க்கும் அணியாக முன்னணியே முன்னணியில் இருக்கின்றது. இப்போது முன்னணியை விடவும் மோசமானதோர் அரசியல் பெருச்சாளியாக தமிழ் அரசுக் கட்சி மாறியிருக்கின்றது. இதனை அந்தக் கட்சியின் உறுப்பினர்கள், தொண்டர்கள் எவ்வாறு தொடர்ந்தும் அனுமதித்துக் கொண்டிருக்கப் போகின்றனர்?

தமிழ் அரசுக் கட்சி வெறும் சுயநலம் பிடித்தவர்களின் - சுயநல திட்டங்களால் சிறைப்பட்டுவிட்டது. இனி அதனை செல்வநாயகம் கூறிய கடவுளாலும் காப்பாற்ற முடியாது.

## அரியநேத்திரனின் பரப்புரையில் தேர்தல் கண்காணிப்பாளர்கள்!



வவுனியா, செப். 09

வவுனியாவில் நேற்று நடந்த தமிழ்ப் பொது வேட்பாளரின் பரப்புரை கூட்டத்தில் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழுவினர் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் சார்பில் சுயேச்சையாக பா. அரியநேத்திரன் போட்டியிடுகிறார்.

இவரை ஆதரித்து குருமண்காடு கலைமகள் விளையாட்டு மைதானத்தில் நேற்று பரப்புரை கூட்டம் நடந்தது. இதில், ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அவர்கள் புகைப்படங்களை எடுத்ததுடன் கூட்டத்தில் பங்கேற்ற அரசியல்வாதிகள், ஜனாதிபதி வேட்பாளர் ஆகியோர் வழங்கிய வாக்குறுதிகளையும் குறிப்பு எடுத்துக்கொண்டனர். (ஐ)

## வங்கக்கடலில் தாழமுக்கம் சூறாவளியாக மாற்றம்!

கொழும்பு, செப். 09

மத்திய வங்காள விரிகுடா பகுதியில் நிலைகொண்டுள்ள தாழமுக்கம், சூறாவளியாக மாறி எதிர்வரும் இரு தினங்களில் வடமேற்கு திசையில் நகர்ந்து வடக்கு ஒடிசா கடற்கரையை அடையும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதன்காரணமாக வங்காள விரிகுடா கடல் பகுதிகளில் 70 முதல் 80 கிலோமீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசுவதுடன், மழை பெய்யக் கூடிய சாத்தியமும் நிலவுகிறது.

எனவே, குறித்த கடற்பகுதியில் மறு அறிவித்தல் வரை மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## இரத்தினக்கல் அகழ்ந்தவர் கைது!

நுவரெலியா, செப். 09

சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவின் பிரவுன்ஸ்விக் தோட்ட பகுதியில் பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

கைதான 32 வயது நபரிடமிருந்து இரத்தினக்கல் அகழ்வதற்கு பயன்படுத்தப்பட்ட கருவிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மாட்டு வண்டி சவாரி!

சிலாபம், செப். 09

புத்தளம் ரெக்லா விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த பாரம்பரிய மாட்டு வண்டி சவாரி இறுதிப் போட்டி இஜ்திமா மைதானத்தில் நடைபெற்றது.

கடந்த ஒரு மாத காலம் தெரிவுப் போட்டிகள் நடைபெற்று இறுதிப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## தேர்தல் விதிமீறல்கள்; 2,863 முறைப்பாடுகள்!

கொழும்பு, செப். 09


ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நேற்றுமுன்தினம் மட்டும் 209 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதன்படி, தேர்தல் முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 863ஆக அதிகரித்துள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு ஆயிரத்து 41 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாடு முகாமைத்துவ நிலையத்திற்கு ஆயிரத்து 822 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவற்றில் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக 2 ஆயிரத்து 775 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

கிடைத்துள்ள முறைப்பாடுகளில் 2 ஆயிரத்து 113 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன. 750 முறைப்பாடுகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 09 திங்கட்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 24
நல்ல நேரம் : 12.04 - 01.34
ராகு காலம் : 07.34 - 09.04
திதி : சஷ்டி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
உற்சாகமாக எதையும் செய்ய தொடங்குவீர்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். அழகும் இளமையும் கூடும். வாகனப் பழுதை சரி செய்வீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் உள்ளவர்களிடம் வளைந்து கொடுத்து செல்வீர்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. விலகிச் சென்றவர்கள் விரும்பி வருவார்கள். வெற்றி கிட்டும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். புதுமை படைக்கும் நாள்.

**கடகம்**
தடைகளைக் கண்டு தளரமாட்டீர்கள். தாய்வழி உறவினர்களால் மனஸ்தாபம் வந்து நீங்கும். பழைய கடனைப் பற்றி அவ்வப் போது யோசிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**சிம்மம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் மீது அதிக அக்கறை காட்டுவார்கள். புது வாகனம் வாங்குவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. தைரியம் கூடும் நாள்.

**கன்னி**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். உறவினர்களால் ஆதாயம் உண்டு. பிள்ளைகளை புதிய பாதையில் வழிநடத்துவார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மனஇறுக்கங்கள் உருவாகும். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கி தவிப்பீர்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

**விருச்சிகம்**
சில வேலைகளை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**தனுசு**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். ஆன்மிக பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை சந்திக்க நேரிடும் நினைத்தது நிறைவேறும் நாள்.

**மகரம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர்கள், ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். சவால்களில் வெற்றி பெறும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். அதிர்ஷ்டம் பெருகும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். வியாபாரத்தில் வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள். வளைந்துகொடுக்க வேண்டிய நாள்.

# வெளிநாட்டு முதலீடுகள் குறித்து தி. மு. க. வெற்று விளம்பரங்கள்!

## பா. ம. க. தலைவர் அன்புமணி சாடல்

பெரம்பலூர், செப். 09

வெளிநாட்டில் இருந்து அதிக முதலீடுகளும் வேலை வாய்ப்புகளும் தமிழகத்திற்கு வந்துள்ளதாக தி. மு. க. அரசு வெற்று விளம்பரங்களை செய்து வருகிறது - இவ்வாறு பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சியின் பெரம்பலூர் மாவட்ட செயலாளர் செந்தில்குமார் இல்ல திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த அன்புமணி செய்தியாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு,

தமிழகத்தில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி அதிக முதலீடுகளையும் வேலை வாய்ப்புகளையும் ஈர்த்துள்ளதாக தமிழக அரசு கூறிவந்த நிலையில், தமிழகத்தில் வெளிநாட்டினரின் முதலீடு ஐந்தாண்டுகளுக்கு முன்பு நான்காவது இடத்தில் இருந்து தற்போது ஆறாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. வெளிநாட்டில் இருந்து அதிக முதலீடுகளும் வேலை வாய்ப்புகளும் தமிழகத்துக்கு வந்துள்ளதாக தி. மு. க. அரசு வெற்று விளம்பரங்களை செய்து வருகிறது - என்றார். (எ)

# ஆன்மீக பேச்சாளர் மகாவிஷ்ணு கைது 5 பிரிவுகளில் பொலிஸார் வழக்கு பதிவு

சென்னை, செப். 09

அவுஸ்திரேலியாவில் இருந்து சென்னை திரும்பிய தன்னம்பிக்கை - ஆன்மீக பேச்சாளர் மகாவிஷ்ணுவை விமான நிலையத்தில் வைத்து கைது செய்த பொலிஸார், அவர் மீது மாற்றுத்திறனாளி உரிமைகள் சட்டம் உள்ளிட்ட 5 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.



சென்னை சைதாப்பேட்டையில் உள்ள பாடசாலையில் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் கடந்த ஒகஸ்ட் 28ஆம் திகதி சொற்பொழிவு நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது. இதில், கலந்துகொண்ட மகாவிஷ்ணு, பாவ - புண்ணிய பலன்கள், குருகுலக் கல்வி முறை ஆகியவை மட்டுமின்றி, மாற்றுத் திறனாளியாக பிறக்க முன் ஜென்ம பாவங்களே காரணம் என்றும் சர்ச்சை கருத்துகளை வெளியிட்டார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த சங்கர் என்ற மாற்றுத்திறனாளி ஆசிரியருடன் மகாவிஷ்ணு வாக்குவாதமும் செய்துள்ளார். இந்த நிலையிலேயே மகாவிஷ்ணு கைது செய்யப்பட்டுள்ளார்.

# மகாவிஷ்ணு நிகழ்த்தியது சனாதன சொற்பொழிவு!

## துரை வைகோ எம். பி.

திருச்சி, செப். 09

சென்னையில் அரசு பாடசாலையில் மகாவிஷ்ணு நிகழ்த்தியது ஆன்மீக சொற்பொழிவு அல்ல. அது சனாதன சொற்பொழிவு. அவர் இந்து மத பெயரை கூறி பிழைப்பு நடத்துபவர். இந்த விடயத்தில் மகாவிஷ்ணுவை பாடசாலைக்கு அழைத்து வந்தவர் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ம. தி. மு. க. பாராளுமன்ற உறுப்பினர் துரை வைகோ தெரிவித்தார். திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)


# "தி. மு. கவின் நடவடிக்கை கண்டிக்கத்தக்கது"

சென்னை, செப். 09

பாடசாலையில் ஆன்மீக சொற்பொழிவுக்கு அனுமதித்த தலைமை ஆசிரியரை பணியிட மாற்றம் செய்ததை அரசு திரும்பப்பெற வேண்டும் என்றும் தி. மு. கவின் இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது என்றும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

பாடசாலையில் நடைபெற்ற சொற்பொழிவானது கல்வித் துறை அதிகாரிகளின் அனுமதியின்றியும், பாடசாலை கல்வித் துறை அமைச்சகத்துக்கு தெரியாமலும் நடைபெற்றதா? எனில் அதைவிட மோசமான நிர்வாகச் செயல்பாடு என்னவாக இருக்க முடியும்? ஒரு வேளை பாடசாலை கல்வித் துறை அதிகாரிகளின் அனுமதியோடு தான் நடைபெற்றது என்றால் அவர்களுக்கு என்ன தண்டனை கொடுப்பது? என்றும் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார். (எ)

# யானை முகத்தோனுக்கு யானைகள் விசேட பூஜை



முதுமலை, செப். 09

முதுமலை தெப்பக்காடு யானைகள் வளர்ப்பு முகாமில் யானைகள் பூஜையிட விநாயகர் சதுர்த்தி விழா கோலாகலமாக நடைபெற்றது. இந்த விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பங்கேற்றனர். (எ)

# உச்சிப் பிள்ளையாருக்கு பிரமாண்ட கொழுக்கட்டை



திருச்சி, செப். 09

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு திருச்சி மலைக் கோட்டை தாயுமான சுவாமி கோவிலில் உள்ள உச்சிப் பிள்ளையாருக்கு 75 கிலோ கொழுக்கட்டை, மலைக் கோட்டை அடிவாரத்தில் உள்ள மாணிக்க விநாயகருக்கு 75 கிலோ கொழுக்கட்டை என மொத்தம் 150 கிலோ கொழுக்கட்டை படையலிடப்பட்டது. இந்த சிறப்பு பூஜையில் தமிழகம் மட்டுமின்றி வெளிநாட்டு புத்தர்களும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேர்தல் பரபரப்புக்கு மத்தியில்

# தையிட்டி விகாரை காணியை சுவீகரிப்பதற்கு வரைபடம்!

யாழ்ப்பாணம், செப்.09

**ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை தீவிரமடைந்துள்ள நிலையில் தையிட்டி விகாரைக்கான காணியை சுவீகரிக்க நிலஅளவீடு செய்து வரைபடமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.**

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் தையிட்டி கிராமத்தில் மக்களுக்கு சொந்த மானது என்று கருதப்படும் நிலத்தில் விகாரை கட்டப்பட்டுள்ளது. விகாரை அமைந்துள்ள பகுதியில் சுமார் 6 ஏக்கர் நிலத்தை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது.

இந்தக் காணியை முன்னர் அளவீடு செய்வதற்கு காணி உரிமையாளர்களும் அரசியல் வாதிகளும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால், மாவட்ட நில அளவை திணைக்கள அதிகாரிகள், அளவீடு மேற்கொள்ளாமல் திரும்பியுள்ளது டன் அறிக்கை சமர்ப்பித்தனர்

இந்த நிலையில், நில அளவைத் திணைக்களத்தின் தலைமைப் பணிமனை அதிகாரிகள் கொழும்பில் இருந்து வருகை தந்து அளவீட்டை மேற்கொண்டு அதன் வரை படத்தை தெல்லிப்பழை பிரதேச செயலாளரிடம் கையளித்துள்ளனர். மேலும், அந்த பகுதியில் உள்ள காணிகளின் உரிமையாளர்களை அடையாளம் காண முடியவில்லை எனவும் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)



# செம்மணி படுகொலையின் 28ஆம் ஆண்டு நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், செப். 09

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் படுகொலை செய்யப் பட்ட சுண்டுக்குளி மாணவி குமாரசாமி கிருஷாந்தியின் 28ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றுமுன்தினம் மாலை செம்மணி பகுதியில் நடைபெற்றது.

இதன்போது செம்மணியில் படுகொலை செய்யப்பட்டு, அங்கு புதைக்கப்பட்ட ஏனைய வர்களும் நினைவு கூரப்பட்டனர்.

செம்மணி படுகொலை நினைவேந்தல் பேரவையின் தலைவர் கிஷோர் தலைமையில் இந்த நினைவேந்தல் நடைபெற்றது. இந்த நினைவேந்தலில் சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் மயூரன் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் நேற்றுமுன்தினம் செம்மணி படுகொலை நினைவேந்தலை முன்னெடுத்தது.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் மாணவியான கிருஷாந்தி (18 வயது) 1996 செப்ரெம்பர் 07ஆம் திகதி வீதியால் சென்ற போது செம்மணி படை முகாமில் இருந்த இராணுவத்தினரால் மறிக்கப்பட்டு, வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

தனது மகளை தேடி குறித்த இராணுவ முகாமுக்கு சென்ற கிருஷாந்தியின் தாயார் குமாரசாமி இராசம்மா, சகோதரன் கு. பிரணவன், அயலவர் சிதம்பரம் கிருபாமூர்த்தி ஆகியோரையும் இராணுவம் கொன்று செம்மணியில் புதைத்தது. இந்த வழக்கு தொடர்பில் 6 இராணுவத்தினருக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.

இதேநேரம், 15 பேர் கொன்று புதைக்கப்பட்டனர் என்ற விடயத்தை கிருஷாந்தி கொலை குற்றவாளி ஒருவர் அரசாங்கத்துக்கு தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# கார், வானை அடித்து நொருக்கி அவற்றுக்கு தீயும் வைத்த நபர்கள்!

யாழ்ப்பாணம், செப். 09

வான், கார் என்பவற்றை அடித்து நொருக்கியதுடன், அவற்றுக்கு தீயும் வைத்து விட்டு வன்முறை குழுவை சேர்ந்த இருவர் தப்பிச் சென்றுள்ளனர்.

இதேநேரம், இந்தத் தீயை அணைக்க முயன்ற பெண் ஒருவர் காயமடைந்துள்ளார் என்றும் தெரிய வருகின்றது.

கோப்பாயில் நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வீட்டின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த வான், காரை அடித்துநொருக்கினர். அத்துடன், அவற்றுக்கு தீயும் வைத்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

வீட்டிலிருந்த பெண் ஒருவர் தீயை அணைக்க



முயன்றபோது காயமடைந்தார். அவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ)

# ஏற்றுமதியாளருக்கான காலக்கெடு நீடிப்பு!

கொழும்பு, செப். 09

தமது ஏற்றுமதி வருமானத்தை இலங்கை ரூபாயாக மாற்றுவதற்கு பொருட்கள் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காலக்கெடுவை இலங்கை மத்திய வங்கி தளர்த்தியுள்ளது.

மேக்ரோ பொருளாதார அபிவிருத்திகளை, குறிப்பாக உள்ளூர் அந்நிய செலாவணி சந்தை நிலவரங்களின் அபிவிருத்திகளை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் ஊடாக, ஏற்றுமதியாளர்கள் தமது ஏற்றுமதி வருமானத்தை இலங்கை ரூபாயாக மாற்றுவதற்கான காலக்கெடுவை கணிசமாக தளர்த்திய இலங்கை மத்திய வங்கி, 2024 ஆம் ஆண்டு இல 01 இலங்கைக்கு ஏற்றுமதி வருவாயைக் கொண்டுவருவதற்கான விதிகளை வெளியிட்டது.

மேலும் இது 01.07.2024 திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானி எண் 2391/02 இல் வெளியிடப்பட்டதுடன், 04.09.2024 அன்று பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டு அன்று முதல் நடைமுறைக்கு வந்தன.

இந்த அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்திய பின்னர், பொருட்களை ஏற்றுமதி செய்பவர்கள் தங்கள் ஏற்றுமதி வருமானத்தை கட்டாயமாக இலங்கை ரூபாயாக மாற்றுவதற்கு பொருந்தும் காலம், ஏற்றுமதி வருமானம் கிடைத்த நாளிலிருந்து மூன்று மாதங்கள் நிறைவடைந்த பின்னர் பத்தாவது நாள் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே உள்ள விதிகளின் படி, ஏற்றுமதி வருமானம் பெறப்பட்ட திகதியை தொடர்ந்து மாதத்தின் ஏழாவது நாளில் தொடர்புடைய நிலுவைகள் கட்டாயமாக இலங்கை ரூபாயாக மாற்றப்பட்டிருக்க வேண்டும்.

இந்த விதிகளை அந்நிய செலாவணி திணைக்களத்தின் றறற.னகந.டாம என்ற இணையத்தளத்தில் அணுக முடியும் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# சீன சி. ஐ. டி. அதிகாரிகள் இலங்கை வந்துள்ளனர்!

கொழும்பு, செப். 09

சீனர்கள் உட்பட வெளிநாட்டு பிரஜைகளை உள்ளடக்கிய இணையவழி நிதி மோசடிகளின் அதிகரிப்புக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவு முன்னெடுத்துள்ள விசாரணைகளுக்கு உதவுவதற்காக சீனாவின் சிறப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் வருகை தந்துள்ளனர்.

அண்மைய நாட்களில் நாடு முழுவதும் இணையவழியில் நிதி மோசடி செய்யும் சம்பவங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு அந்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் அதிகமானவர்கள் சீனப் பிரஜைகளாக உள்ளனர். குறித்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள நபர்களின் மடிக்கணினிகள் மற்றும் தொலைபேசியில் உள்ள தரவுகள் சீன மொழியில் இருப்பதால் மேலதிக விசாரணைகளை முன்னெடுப் பதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நெருக்கடியான நிலைமைகள் ஏற்பட்டிருந்தன.

இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் வெளிவிவகார அமைச்சின் ஒத்துழைப்புடன் பொலிஸார் சீனாவின் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் உதவியை நாடினர். இதையடுத்து குறித்த விசாரணைகளுக்குத் தேவையான ஆதரவை வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து சீன விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 10 அதிகாரிகள் வருகை தந்துள்ளனர். இவர்கள் இலங்கை குற்றப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து செயல்பட ஆரம்பித்துள்ளனர்.

கடந்த ஜூன் வரையிலான காலப்பகுதி வரையில் இணையம் மூலம் மோசடியில் ஈடுபட்ட 137 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 31 பேர் சீனர்களாவர். அவர்களிடம் இருந்து 158 கைபேசிகள், 16 மணிக்கணினிகள், 60 கணினிகள் கைப்பற்றப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# சிறுமி துஷ்பிரயோகம்; இளைஞர்மீது முறைப்பாடு!

வவுனியா, செப். 09

14 வயது சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கினார் என்று இளைஞர் ஒருவருக்கு எதிராக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுளது.

குறித்த பிரமுகர் கடந்த பெப்ரவரி 21ஆம் திகதி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் சிறுமியின் தாயாருக்கு தெரிய வந்த போதும் அவரை குறித்த இளைஞர் அச்சுறுத்தியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

இந்த நிலையிலேயே, சம்பவம் நடந்து 6 மாதத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயார், மாவட்ட செயலக சிறுவர் பிரிவு மற்றும் வவுனியா பொலிஸ் நிலையம் என்பவற்றில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சந்தேகநபர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பயங்கரவாத தடுப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் ஜனாதிபதியான பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்படாது

## கல்வி அமைச்சர் சுசில் யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 09

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்ததன் பின்னர் பாராளுமன்றத்தை கலைக்கப்போவதில்லை. ஏனெனில், பொருளாதார மீட்சிக்காவும் சமூக கட்டமைப்பின் முன்னேற்றத்துக்காவும் எடுத்துள்ள தீர்மானங்களை முன்னெடுக்க தற்போதைய அரசாங்கம் தொடரவேண்டும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.**



உடுப்பிட்டியில் நேற்று முன்தினம் ஜனாதிபதி ரணிலை ஆதரித்து நடந்த பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நெருக்கடியான சூழலில் அரசாங்கத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்கும்போது கல்வி அமைச்சராக நான் நியமிக்கப்பட்டேன். அப்போதைய காலகட்டத்தில் கல்வித்துறை மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது. தேசிய பரீட்சைகள் உரிய காலத்தில் நடத்தப்படாமல் பிற்போடப்பட்டிருந்தன. கல்வித்துறையை மீண்டும் சீர்செய்ய முடியுமா என்ற பெரும் பிரச்னை எழுந்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் கல்வித்துறையில் நிலவிய பிரச்னைளுக்கு கட்டம் கட்டமாக தீர்வு கண்டுள்ளோம். வடக்கு மாகாணம் உட்பட அனைத்து மாகாணங்களுக்கும் ஆசிரியர் நியமனங்களை வழங்கியுள்ளோம். பாடசாலை சீருடைகள் மற்றும் பாடப்புத்தகங்களை வழங்கியுள்ளோம்.

யாழ்ப்பாண மக்களுக்கு முதலாவதும், இரண்டாவதும், மூன்றாவதும் கல்வி என்பதை உறுதியாக குறிப்பிட வேண்டும். கல்வித்துறையில் காணப்படும் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் மக்கள் விடுதலை முன்னணியினர் தொழிற்சங்க போராட்டங்களை முன்னெடுத்தார்கள்.

ஆசிரியர் - அதிபர் சேவையில் நிலவும் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி விசேட குழுவை நியமித்தார். இந்த குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இதற்கமைய எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அரச சேவையாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும். முதலாம் தர சேவை ஆசிரியர்களின் சம்பளம் 38 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்கப்படும். இதேபோல், முதலாம் தர சேவை அதிபர்களின் சம்பளம் 39 ஆயிரம் ரூபாயாலும் அதிகரிக்கப்படும்.

புதிதாக நியமனம் பெறும் டிப்ளோமா தர ஆசியர்களின் சம்பளம் 17 ரூபாயாலும், பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளம் 19 ஆயிரம் ரூபாயாலும் 2025 ஜனவரி முதல் அதிகரிக்கப்படும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் பாராளுமன்றத்தை கலைக்க போவதில்லை - என்றார்.



# தேர்தலில் ரணில் வெற்றிபெற்று தமிழரின் பிரச்னையை தீர்ப்பார்!

## இது மாவையின் எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணம், செப். 09

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்று தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்த்து - வடக்கு மாகாண அபிவிருத்தியை உறுதிப்படுத்துவார் என்று தாம் எதிர்பார்ப்பதாக இலங்கை தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் மாவை சேனாதிராசாவின் இல்லத்துக்கு சென்றார். இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே மாவை மேற்கண்டவாறு கூறினார்.


மேலும், ஜனாதிபதியுடனான சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலவரங்கள், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் மற்றும் வடக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நீண்ட காலமாக தீர்க்கப்படாத வடக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரச்னைக்கு தீர்வு காணும் பெரும் பொறுப்புள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களை அபிவிருத்தி செய்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்பட்டது என்றும் அவர் கூறினார். (ஐ)

# மாகாண சபை முறைமையை மீண்டும் பலப்படுத்துவேன்!

## யாழில் ஜனாதிபதி ரணில் உறுதி



யாழ்ப்பாணம், செப். 09

மாகாண சபை முறைமையை மீண்டும் பலப்படுத்தி ஒவ்வொரு மாகாணத்துக்கும் விரிவான அபிவிருத்தியை வழங்குவதே எனது நோக்கம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உடுப்பிட்டியில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசிய அவர் தெரிவித்தவை வருமாறு,

““இரண்டு வருடங்களுக்கு முன்னர் குடும்பமாக ஒவ்வொரு வரிசைகளில் நிற்கிறோம். ரூபாய் பெரும் வீழ்ச்சி கண்டது. வியாபாரங்கள் மூடப்பட்டு தொழில்களை இழக்க நேரிட்டது. மக்கள் கஷ்டங்களை மறந்திருக்க வாய்ப்பில்லை. மீண்டும் அந்த யுகம் வேண்டுமா? நல்ல எதிர்காலம் வேண்டுமா? என்பதை தேர்தல் தீர்மானிக்கும்.

அன்று நாங்கள் அரசமைத்த போது அநுரவும் சஜித்தும் இருக்கவில்லை. இந்த பிரச்னைகளுக்குத் தீர்வு காண உதவவும் இல்லை. இப்போது அவர்களால் பிரச்னைகளை தீர்க்க முடியும் என்கின்றனர். எல்லாவற்றையும் சீர்குலைக்கவே முயற்சிக்கின்றனர். கஷ்டப்பட்டு 2 வருடங்களில் பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டோம்.

சுற்றுலா பயணிகள் வருகையை இரட்டிப்பாக அதிகரிப்போம். அதற்காகவே பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தோம். வடக்கில் மூன்று கைத்தொழில் பேட்டைகளை அமைப்போம். டிஜிற்றல் பொருளாதார மையங்களையும் அமைப்போம். யாழ். மக்கள் வெளியில் சென்று தொழில் செய்யாமல் இங்கு தொழில்களை செய்ய வழிமுறைகளை உருவாக்குவோம். யாழ் நதி திட்டமும் விரைவில் ஆரம்பிக்கப்பட்டு குடிதண்ணீர் பிரச்னைக்குத் தீர்வு தருவோம் - என்றார். (ஐ)

# தெற்கு, வடக்கு மக்களை ரணிலே ஒரே கண்ணோட்டத்தில் பார்த்தார்!

## அமைச்சர் நிமால் சொல்கிறார்

யாழ்ப்பாணம், செப். 09

இந்நாட்டின் தெற்கிலிருந்த தலைவர்கள் வடக்கு மக்களை இரண்டாம்பட்சமாகவே கருதினர். ஆனால், அனைவரையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்த்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை நாம் மறந்துவிடக்கூடாது - என்று கூறியிருக்கிறார் அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா.

உடுப்பிட்டியில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "நாடு மிகக் கஷ்டத்திலிருந்தவேளையில் மீட்க வந்தமைக்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாம் ஆதரவளித்தோம். அரசியல் இலாபம் கருதாமல் நாட்டைப் பற்றி சிந்தித்து அவர் செயலாற்றியதாலேயே எம்மால் தேர்தலை நடத்த முடிந்திருக்கிறது. அவரைக் கண்டு பலரும் பொறாமை கொண்டிருந்தாலும் நாம் அவருக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டுமென நினைக்கிறோம்.



யாழ்ப்பாணத்தின் பல்வேறு பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டுள்ளார். இந்நாட்டின் தெற்கிலிருந்த தலைவர்கள் வடக்கு மக்களை இரண்டாம்பட்சமாகவே கருதினர். ஆனால், அனைவரையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்த்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

அதனால்தான் தெற்கில் போன்றே வடக்கு மக்களுக்கும் காணி உறுதிகளை வழங்கினார். இப்பகுதிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை பலப்படுத்தவும் அவர் பெருமளவான நிதியை ஒதுக்கியிருக்கிறார். விமான சேவை அமைச்சராக நியமித்த வேளையிலும் பலாலி விமான நிலையத்துக்கு சர்வதேச விமான சேவைகளை கொண்டு வரக்கூடிய நிலையை ஏற்படுத்துமாறு வலியுறுத்தி னார்.

இதன்படியே யாழிலிருந்து இந்தியாவுக்கு விமான சேவை நடைபெறுகிறது. நாளாந்தம் இரு விமான சேவைகள் இடம்பெறுகின்றன. இவ்வாறான விடயங்களை வடக்கு மக்களுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியிருக்கிறார். எனவே, யாழ். மக்கள் சரியானவரைத் தெரிவு செய்ய வேண்டும்." -என்றார். (ஐ)

# “பாதிப்பற்றவாறு கருத்து சுதந்திரம் கண்காணிக்கப்படுதல் வேண்டும்!”



கொழும்பு, செப். 09

ஒருவரின் உரிமை பிறிதொருவருக்கு இடையூறாக இருத்தல்கூடாது. தற்போதைய கருத்துச் சுதந்திரம் பேஸ்புக்கில் உயிரச்சுறுத்தல் விடுக்கும் வகையில் காணப்படுகிறது. ஆகவே, கருத்துச் சுதந்திரம் பாதிப்பற்ற வகையில் கண் காணிக்கப்படவேண்டும் என சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

மார்ச் 12 இயக்கத்தின் ஏற்பாட்டில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடந்த பொது விவாதத்தில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், இந்த விவாதத்துக்கு என்னைத் தவிர ஏனைய [illegible] மல் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது. சவால்களை எதிர்க்கொள்ளும் தற்றுணிபு எனக்கு உண்டு. ஆகவே மக்கள் எனக்கு வாக்களிக்க வேண்டும் - என்றும் இதன் போது கூறியிருந்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் அரசு கட்சியின் குழு ஒன்று ரணிலுடன் தனியாக சந்திப்பு

யாழ்ப்பாணம், செப். 09

சசிகலா ரவிராஜ் உள்ளிட்ட தமிழ் அரசுக் கட்சியை சேர்ந்த சிலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேசியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

தமிழ் அரசுக் கட்சியின் சசிகலா ரவிராஜ், அகிலன் முத்துக்குமாரசாமி, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான மயூரன், சுதர்சன், மாவை சேனாதிராசாவின் மகன் கலையமுதன், குணாளன் ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இந்தப்பேச்சின்போது சாவகச்சேரியை தனியான பிரதேச செயலக பிரிவாக பிரிப்பது தொடர்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக சசிகலா ரவிராஜ் பின்னர் தெரிவித்திருந்தார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ள நிலையில் ரணிலுடனான இந்த சந்திப்பு பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. (ஐ)

# சஜித்துடன் இரகசிய ஒப்பந்தம் எதையும் நாம் செய்யவில்லை!

## சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 09

**சஜித் பிரேமதாஸவுடன் எந்தவிதமான இரகசியமான ஒப்பந்தத்தையும் செய்யவில்லை என்று இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

சஜித் பிரேமதாஸவை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுத்த போது உடன்பாடுகள் ஏதும் செய்யப்பட்டனவா? அவ்வாறு செய்யப்படாமைக்கான காரணங்கள் என்ன என்று வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கைத் தமிழ் அரசு கட்சி தென்னிலங்கை வேட்பாளர்களுடன் எந்தவிதமான எழுத்துமூல உடன்பாடுகளையும் இதுகாலவரையில் மேற்கொண்டதில்லை. அந்த வகையில் எமது நிலைப்பாடானது ஜனாதிபதி வேட்பாளர்கள் அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட தமிழர்களின் விடயங்கள் தொடர்பில் பகிரங்கமாக தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவிக்க வேண்டும் என்பதே.

எம்மைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களுடன் உடன்பாடுகளை எட்டுவது வாக்குறுதிகளை அளிப்பது போன்ற செயல்பாடுகளை தவிரவும் தங்களுடைய விஞ்ஞாபனங்களில் குறிப்பிட்டு ஒட்டுமொத்தமான நாட்டுக்கும் கூற வேண்டும் என்பதே முக்கியமானது.

அந்த வகையில் சஜித் பிரேமதாஸ தனது நிலைப்பாட்டை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார். அதற்கு அமைவாகவே நாம் சஜித்தை ஆதரிக்கும் முடிவை எடுத்தோம் - என்றார். (ஐ)

# தமிழ் எம். பிக்கள் அரசுடன் இணைந்தால் பொலிஸ் துறை அதிகாரத்தை பெறலாம்!

## கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான்

யாழ்ப்பாணம், செப். 09

வடக்கிலிருந்து தெரிவாகும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்து பொலிஸ் துறைசார் அதிகாரங்களை பெற்று - அவற்றை நிர்வகிக்க முடியும்", - இவ்வாறு தெரிவித்துள்ளார் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான்.

உடுப்பிட்டியில் நேற்று முன்தினம் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"இன்று சில வேட்பாளர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனவாதி என்கிறார்கள். எதிர்த்தரப்பு வேட்பாளர்களில் ஒருவர் 2015 - 2019 வரையில் கலாசார அமைச்சராக இருந்த போது, ஆயிரம் விகாரைகள் கட்டத் தீர்மானித்திருந்தார். அவற்றை தமிழ் மக்கள் அதிகமுள்ள பகுதிகளில் செய்யவே அவர் அனுமதி வழங்கியிருந்தார். அவ்வாறின்றி, சிங்கள மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் அதனை செய்திருந்தால் அவருக்கும் நாமும் ஆதரவளித்திருப்போம். எனவே, இவ்வாறான தலைவர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை இனவாதி என்று சொல்வது வேடிக்கையானது.

இன்று வடக்கில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் பற்றி அதிகமாக பேசப்படுகிறது. காணிப் பிரச்னைக்கு ஜனாதிபதி தொடர்ந்தும் தீர்வுகளை வழங்குகிறார். ஆனால், எந்தவொரு மாகாணத்துக்கும் பொலிஸ் அதிகாரங்கள் இல்லை. இங்கிருந்து மக்கள் பாராளுமன்றத்துக்கு அனுப்புகின்ற அனைவரும் அரசாங்கத்துக்கு எதிராகவே செயல்படுகின்றனர். ஆனால், அவர்கள் அரசாங்கத்துடன் இணைந்துகொண்டு பொலிஸ் துறைசார் அதிகாரங்களைப் பெற்று அந்த விடயங்களை நிர்வகிக்க முடியும்.

வடக்கிலிருந்து 6 அமைச்சரவை அமைச்சர்களைத் தெரிவு செய்ய முடியும். ஆனால் ஒருவர் மட்டுமே வருகிறார். அதனால் நமது உரிமைகளை நாமே விட்டுக் கொடுக்கிறோம். நாம் தவறு செய்வதால் இன்னுமொருவர் வந்து தனது சமூகத்துக்கு அதனைச் செய்கிறார். எனவே, மக்கள் சரியான தலைவரை தெரிவு செய்து அவரோடு இணைந்து பயணிக்க வேண்டும்." என்றார்.

# இனவாதத்தை தூண்டியமைக்காக ரணிலே மன்னிப்பு கேட்கவேண்டும்!

## அநுரகுமார சொல்கிறார்



கொழும்பு, செப். 09

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பிரசார கூட்டத்தில் இனவாதத்தை தூண்டியதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ரணில், இந்த தேர்தலில் இனவாதத்தை தூண்ட முயற்சிக்கிறார். எனினும், தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

ரணிலுக்கு அவர் சரியான பதிலை அளித்தார். ஆகவே, ரணில் இப்போது வடக்கு மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். நாட்டில் இனவாதத்தை தூண்டும் அரசியல் தற்போது இல்லை. அவ்வகையான அரசியல் இப்போது செல்லுபடியாகாது. அது, வெற்றியடைவதும் இல்லை" - என்றும் கூறியுள்ளார். (ஐ)

# அரசமைப்பை பாதுகாக்கும் ஆட்சியை முன்னெடுப்போம்!

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித்

கொழும்பு, செப். 09



அரசமைப்பையும் சட்டத்தின் ஆட்சியையும் ஜனநாயக கட்டமைப்பையும் பாதுகாத்து நல்லாட்சியை முன்னெடுக்கும் வகையில் பொறுப்புள்ள நிர்வாகக் கட்டமைப்பை முன்னெடுப்போம். தச ராஜ தர்மத்தை மையப்படுத்தி முன்னெடுத்துச் செல்வோம் என்று சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டை ரஜமகா விகாரையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வழிபட்ட பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், ஒற்றுமையே நாட்டின் மிகப் பெரிய பலமாகும். எனவே இன, மத, குல, வகுப்பு, கட்சி பேதங்களின்றி ஒற்றுமையோடு முன்னோக்கி செல்வதற்கு நடவடிக்கை எடுப்போம். அத்துடன், நாட்டின் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் முறையாகவும் நியாயமாகவும் நடைபெறும். சரியான வழிமுறையை கையாளும் போது எவருக்கும் திருட முடியாது.

கொள்முதல் முறை இல்லாத காரணத்தால்தான் அதிகமான மோசடிகள் நடக்கின்றன. அதனால் சரியான நடை முறைகளை கையாண்டு செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும். அவசர நிலைமைகளின்போது இடம்பெறுகின்ற கொள்முதல் முறைகளில் இருந்து விலகி பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டமையால், கடந்த காலங்களில் பெருந்தொகை யான நிதி மோசடி நடைபெற்றன - என்றும் அவர் சாடினார். (ஐ)

# உடல்நல குறைவால் அநுரகுமார பாதிப்பு

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

கொழும்பு, செப். 09

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க உடல்நல பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார். எனவே, அவரை ஓய்வெடுக்க மருத்துவர்கள் வலியுறுத்தியுள்ளனர் என்று ஜே. வி. பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக அநுரகுமார தொடர்ச்சியாக ஓய்வின்றி பணியாற்றி வருகிறார். இதனால், உடல்நல பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார். இதனாலேயே மாத்தறை பரப்புரை கூட்டத்தில் அவர் பங்கேற்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# எங்களை மறந்த ரணிலுக்கு எமது பலத்தை காட்டுவோம்!

## மொட்டுக் கட்சி சொல்கிறது

கொழும்பு, செப். 09

கடந்து வந்த பாதையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மறந்துவிட்டார். எதிர்வரும் 22ஆம் திகதி எமது பலத்தை ஜனாதிபதிக்கு காண்பிப்போம். பெரும்பான்மையான மக்கள் எம்முடன் உள்ளார்கள் என்றுமுன்னாள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் தெரிவித்தார்.

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், 2020ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் படுதோல்வியடைந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நாங்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்தோம். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் கட்சி மட்டத்தில் வழங்கினோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நாட்டுக்கு எதிரான செயல்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது என்பதால்தான் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ஷவை வேட்பாளராக களமிறக்கினோம்.

ஜனாதிபதியின் அரசியல் செயல்பாடுகளுக்கு நாங்கள் எதிராக செயல்படுவதால் இராஜாங்க அமைச்சு பதவியில் இருந்து எம்மை நீக்கினார். ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தி செயல்படும்போது அனைத்து சாதக மற்றும் எதிரான கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். நாட்டுக்காக ஜனாதிபதி பக்கம் சென்றுள்ளோம் என்று குறிப்பிட்டுக் கொள்ளும் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்.

எதிர்வரும் 22ஆவது திகதி எமது பலத்தை ஜனாதிபதிக்குக் காண்பிப்போம். பெரும்பான்மையாக மக்கள் எம்முடன் உள்ளார்கள் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ரணிலின் உயிருக்கு ஆபத்து துப்பாக்கி ரவையுடன் இளைஞன் கைது

## மட்டக்களப்பில் பரபரப்பு, தீவிர விசாரணை

மட்டக்களப்பு, செப். 09

**மட்டக்களப்பு கிரான் கோரகல்லிமடுவில் நேற்று ஞாயிற்றுக் கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் பிரசார கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்ற நிலையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இளைஞன் ஒருவரை துப்பாக்கி ரவையுடன் கைதுசெய்துள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.**

வாகரை அம்பந்தனாவெளியைச் சேர்ந்த 22 வயது கடற்றொழிலாளி ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த இளைஞன் மேலதிக விசாரணைக்காக பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனால் தேர்தல் பிரசாரக் கூட்டம் கிரான் கோரகல்லிமடு விளையாட்டு மைதானத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டது.

இதில் பங்குபற்றுவதற்காக பொதுமக்கள் பலர் வாகனங்களில் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்தும் கட்சி ஆதரவாளர்களால் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

துப்பாக்கி ரவையுடன் கைதான இளைஞனும் வாகரை பிரதேசத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்த நிலையில் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டம் எவ்வித குழப்பமின்றி சற்று தாமதித்து நடைபெற்றது. (எ)







மர்ஹூமா இல்யாஸ் மும்தஹினா யாக்கூப் ஹாரி எழுதிய தீபமெனத் திகழுகிறார் ந(எ)ம் மகரூப் கவிதை நூல் வெளியீட்டு விழா கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

# கவிஞரின் ஆவணப்படுத்தல் முன்னோட்டம் வெளியீடு



மட்டக்களப்பு, செப். 09

செட்டியூர் சிந்தனை செல்வன் கவிஞர் மயில்வாகனத்தின் வாழ்க்கை பயணத்தை இலத்திரயல் ஊடாக ஆவணப்படுத்தல் முன் னோட்டம் வெளியிடப்பட்டுள்ளது.

கவிஞர் மயில்வாகனத்தின் 86 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு கவிஞர் மயில்வாகனம் கலைப்பணி மன்றத்தால் "கவிஞரின் வாழ்க்கை பயணத்தை" அடிப்படையாகக் கொண்டு அவரோடு வாழ்ந்தவர்கள் மற்றும் அவரது கலை பாசறையில் விளைந்த முத்துக்களின் கனதியான வார்த்தை பெறுமதியால் கவிஞரின் படைப்புலகம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கவிஞர் மயில்வாகனம் கலைப்பணி மன்றத்தின் தலைவரும், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளருமாகிய எம். கோபாலரத்தினம் இந்த முன்னோட்டத்தை வெளியிட்டு வைத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செட்டிப்பாளையத்தில் சிந்தனைச் செல்வன் என்ற புனைப்பெயர் கொண்ட கவிஞர் க. மயில்வாகனம் ஆவார்.அவர் கவிதையோடு மட்டுமன்றி நாடகம், நாட்டுக் கூத்து, நாட்டிய நாடகம், வசந்தன், கும்மி, கோலாட்டம் போன்ற கலைகளில் வல்லவராக திகழ்ந்தார். (எ)

# கஞ்சாவுடன் கைதானவருக்கு மறியல்

அக்கரைப்பற்று, செப். 09

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் குறித்த பிரதேசத்துக்குச் சென்ற பொலிஸார் சந்தேக நபரை கைது செய்து அவரிடமிருந்த 58 கிராம் கஞ்சாவையும் பறிமுதல் செய்தனர்.

குறித்த சந்தேகநபரை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய போது எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வாக்குசீட்டை படம் எடுத்த இ.போ.ச. சாரதி கைதானார்


மூதூர், செப். 09

திருகோணமலை, மூதூர் (இ. போ. ச) டிப்போவில் கடமையாற்றும் சாரதி ஒருவர் தபால் வாக்களிப்பு நிலையத்தில் வைத்து தனது வாக்குச் சீட்டை தொலைபேசியூடாக படம் எடுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இடம் பெற்ற தபால் வாக்களிப்பு நிலையத்தில் கடமையாற்றிய ஒருவர் மூதூர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேகநபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (எ)

# 60 மீற்றர் ஓட்டப் போட்டியில் மாணவனுக்கு தங்கப் பதக்கம்



மட்டக்களப்பு, செப். 09

மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டியில் நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலை மாணவன் எம். எச். எம். ஹின்ஸான் 12 வயது ஆண்கள் பிரிவில் 60 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடம் வந்து தங்கப் பதக்கத்தை வென்றார். இந்த மாணவன் 8. 04 செக்கன்களில் இலக்கை அடைந்து வெற்றி பெற்றுள்ளார். (எ)

# தேர்தல் காலத்தில் உரிமைகளை மீறினால் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யலாம்

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

கல்முனை, செப். 09

தேர்தல் காலத்தில் அடிப்படை உரிமைகளை மீறினால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யமுடியும் என்று கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.




தேர்தல் காலத்தில், தேர்தல் சட்டங்கள், நாட்டின் ஏனைய சட்டங்கள், நாட்டின் அரசமைப்புக்கு இணங்க அந்தத் தேர்தல் நடத்தப்படு வதை உறுதி செய்வதற்கு அரச உத்தியோகத்தர்கள் கடமைப்பட்டுள்ளனர். எனவே, ஒவ் வொரு விடயத்துக்குப் பொறுப்பான அரச உத்தியோ கத்தர்கள், அந்தச் சட்டங்களுக் கமைவாக தங்களது கடமைகளை நியாயமானதாகவும் பக்கச்சார்பின்றியும் செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

1978ஆம் ஆண்டின் அரசமைப்பு யாப்பின்படி, மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை, சுதந்திரமாக அரசியலில் [illegible] படும் உரிமை, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான உரிமைகளுடன் சட்டத்துக்கு முன் யாவரும் சமம் என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு அரச உத்தியோ கத்தர்களும் அரசமைப்புக்கு அமைவாக செயல்படுவதற்கு உறுதிமொழி செய்துள்ளனர். அரச உத்தியோகத்தர்கள் கொண்டுள்ள சட்ட ரீதியான கடமைகளை [illegible] அல்லது நடவடிக்கை மேற்கொள்ளாமல் விடல், பக்கச்சார்பாக செயல்படல் அரசமைப்பு அடிப்படை உரிமையை மீறும் செயலாகும்.

அவ்வாறு மீறுகின்ற சந்தர்ப்பத்தில் அவர்க ளுக்கு எதிராக 1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழுவுக்கு புலனாய்வுகள் மற்றும் விசாரணைகளை நடத் துவதற்கு மற்றும் அவர் கள் தொடர்பாக நடவ டிக்கை எடுப்பதற்கு ஆணைக் குழுவுக்கு அதிகாரம் உண்டு.

இந்த அடிப்படையில் எமது பிராந்தியத்தில் தேர்தல் நடைபெறுவதற்கு முன், தேர்தல் தினத்தன்று அல்லது தேர்தலின் பின்னர் அரச, நிர்வாக, நிறைவேற்றுத் துறையினர் அடிப்படை உரிமையை மீறியதற்கான அல்லது மீறப்படுவதற்கான ஏதுக்கள் இருக்குமாக இருந்தால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை அலுவலகத்துக்கு முறைப்பாடு செய்ய முடியும் என்று அவர் மேலும் கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# உக்ரைன்மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்!

## 50 பேர் பலி, 300 பேர் படுகாயம்



கீவ், செப். 09

**உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் 50 பேர் உயிரிழந்தனர். 300 பேர் படுகாயமடைந்தனர்.**

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் நேற்று 927 நாளாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் பல்லாயிரக் கணக்கானோர் உயிரிழந்தனர்.

உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் வழங்கி வருகின்றன. போரை நிறுத்த பல்வேறு நாடுகள் முயற்சித்து வருகின்றன. போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுகளுக்குத் தயாராக இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார். ஆனால், அமைதிப் பேச்சுகள் தொடர்பில் உக்ரைன் இதுவரை எந்த வித அறிவிப்பும் வெளியிடவில்லை. அதேவேளை, இரு நாடுகளுக்கும் இடையே போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்த நிலையில், உக்ரைனின் பொல்டோவா மாகாணத்தில் உள்ள இராணுவப் பயிற்சி மையம் மீது ரஷ்யா நேற்று ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 50 பேர் உயிரிழந்தனர். மேலும் 300 பேர் படுகாயமடைந்தனர். (எ)



கட்டுமானங்கள் தரைமட்டம்

## அகதிகள் முகாம் பகுதியிலிருந்து வெளியேறிய இஸ்ரேல் படையினர்

காஸா, செப். 09


இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலால் ஏராளமான கட்டுமானங்கள் தரைமட்டமாகியுள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை பகுதியிலுள்ள ஜெனின் அகதிகள் முகாம் பகுதியில் கடந்த 10 நாட்களாக இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டிருந்த இஸ்ரேல் படையினர் அங்கிருந்து வெளியேறினர்.

இது குறித்து ரொய்ட்டர்ஸ் வெளியிட்டுள்ள செய்தியில்,

இஸ்ரேல் படையினர் வெளியேறுவதற்கு முன்னர் அவர்களின் 10 நாட்கள் தாக்குதல் நடவடிக்கையில் ஏராளமான கட்டுமானங்களை தரைமட்டமாக்கியுள்ளனர். இது குறித்து பலஸ்தீன வெளிவிவகாரத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், காஸாவில் ஏற்படுத்திய நாசத்தை மேற்குக் கரை பகுதிக்கும் இஸ்ரேல் இராணுவம் கொண்டுவந்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேற்குக் கரையின் ஜெனின் மற்றும் துல்கர்ம் பகுதியில் "பயங்கரவாத எதிர்ப்பு" நடவடிக்கையைத் தொடங்கியதாக இஸ்ரேல் கடந்த மாதம் 27ஆம் திகதி அறிவித்தது. இந்த நடவடிக்கையில் 39 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாகவும் சுமார் 140 பேர் காயமடைந்ததாகவும் பி. பி. சி. ஊடகம் தெரிவித்துள்ளது. (எ)



## பழங்குடியினர் மோதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

### பாப்பரசர் பிரான்சிஸ் வேண்டுகோள்

போர்ட் மோர்ஸ்பி, செப். 09

பப்புவா நியூ கினியாவை சிதைத்து வரும் பழங்குடியின மோதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு பாப்பரசர் பிரான்சிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாப்பரசர் பிரான்சிஸ் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் 11 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தோனேஷியாவின் ஜகார்த்தாவிலிருந்து பப்புவா நியூ கினியா நாட்டின் தலைநகரான போர்ட் மோர்ஸ்பிக்கு நேற்று முன்தினம் சென்றார். பாப்பரசரை பழங்குடி மக்கள் ஆடி பாடி வரவேற்றனர். பின்னர் பாப்பரசர், ஆளுநர் மற்றும் பிராந்தியத்தைச் சேர்ந்த உயரதிகாரிகளைச் சந்தித்தார்.

அவர்கள் மத்தியில் பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்தவை வருமாறு,

பப்புவா நியூ கினியா மக்களின் பன்முகத்தன்மையைக் கண்டு வியப்படைகிறேன். இங்கு சுமார் 800 மொழிகள் பேசப்படுகின்றன. பன்முகத் தன்மை கொண்ட நாட்டில் நீண்ட காலமாக நடைபெறும் மோதல் கவலையளிக்கிறது. பழங்குடியினர் இடையேயான மோதலை கைவிட வேண்டும். பழங்குடியினரின் இடையே நீடிக்கும் வன்முறை முடிவுக்கு வரும் என்பது எனது நம்பிக்கையாகும். ஏனெனில் இது பல விதத்தில் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது, மக்கள் நிம்மதியாக வாழ்வதைத் தடுக்கிறது. நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கிறது.

பொது நலனுக்காக மக்கள் தங்கள் தனிப்பட்ட நலன்களை தியாகம் செய்து, உட்கட்டமைப்பை மேம்படுத்தவும், மக்களின் சுகாதாரம் மற்றும் கல்வித் தேவைகளை நிவர்த்தி செய்யவும், கண்ணியமான வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும் செய்ய வேண்டும். பப்புவா நியூ கினியாவின் வளங்கள் முழு சமூகத்துக்கும் கடவுளால் விதிக்கப்பட்டவை. வெளி நாட்டு நிபுணர்கள் மற்றும் பெரும் சர்வதேச நிறுவனங்கள் இந்த வளங்களைப் பயன்படுத்துவதில் ஈடுபட்டிருந்தாலும், வருவாயை விநியோகிக்கும் போதும், தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும்போதும் உள்ளூர் மக்களின் தேவைகளை கருத்தில் கொள்வது நல்லது என்றார். (எ)

## ரஷ்யா - உக்ரைன் போரை நிறுத்த இந்தியாவால் மட்டும்தான் முடியும்

### இத்தாலி பிரதமர் மெலோனி நம்பிக்கை



ரோம், செப். 09

உக்ரைன் - ரஷ்யா இடையே நீடித்து வரும் போரை நிறுத்த இந்தியாவால் மட்டும்தான் முடியும் என்று இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி தெரிவித்தார்.

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் 927 நாளாக நீடித்து வருகிறது.

இந்த நிலையில், இரு நாடுகளுக்கும் இடையேயான பிரச்னையை முடிவுக்கு கொண்டுவர இந்தியாவால்தான் முடியும். சீனா போன்ற நாடுகளாலும் உதவ முடியும் என்றும் மெலோனி கூறினார். உக்ரைனுடன் பேச்சுகளுக்குத் தயார் எனவும் சீனா, இந்தியா, பிரேசில் போன்ற நட்பு நாடுகள் மத்தியஸ்தம் செய்யலாம் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கூறியிருந்த நிலையில், இத்தாலி பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார். (எ)

## விண்வெளி வீரர்கள் இன்றி பூமிக்கு வந்த ஸ்டார்லைனர்

வாஷிங்டன், செப். 09

தொழில்நுட்ப கோளாறை சந்தித்த ஸ்டார்லைனர் விண்கலம் விண்வெளி வீரர்கள் இன்றி சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து பூமியை வந்தடைந்தது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ், விண்வெளி வீரர் புட்ச் வில்மோர் இருவரும் கடந்த ஜூன் 5ஆம் திகதி ஸ்டார்லைனர் விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி மையத்துக்கு சென்றனர். அங்கு அவர்கள் ஆய்வுகளை மேற்கொண்டனர்.



இருவரும் ஆய்வுகளை நிறைவு செய்து 8 நாட்களில் பூமிக்குத் திரும்பத் திட்டமிட்டிருந்தனர்.

இந்த நிலையில் ஸ்டார்லைனர் விண்கலத்தில் தொழில்நுட்ப கோளாறு கண்டறியப்பட்டது. விண்கலத்தின் த்ரஸ்டர்களில் கோளாறு மற்றும் ஹீலியம் வாயு கசிவு கண்டறியப்பட்டது. இதனால், சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் பூமிக்குத் திரும்புவதில் சிக்கல் ஏற்பட்டது. கோளாறு சரிசெய்யப்பட்டபோதும் இருவரையும் ஸ்டார்லைனர் விண்கலத்தில் பூமிக்கு அழைத்து வரவேண்டாம் என நாசா முடிவெடுத்தது.

இருவரையும் பூமிக்கு கொண்டுவர எலான் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான க்ரு ட்ராகன் விண்கலம் பயன்படுத்தப்படவுள்ளது. க்ரு ட்ராகன் விண்கலம் இந்த மாத இறுதியில் சர்வதேச விண்வெளி மையத்துக்கு அனுப்பப்படவுள்ளது. இந்த விண்கலம் மூலம் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் இருவரும் பூமிக்குத் திரும்புவார்கள் என நாசா தெரிவித்துள்ளது.



## வியட்நாமை புரட்டிப்போட்ட யாகி சூறாவளி

ஹனோய், செப். 09

கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடுமையான சூறாவளி வியட்நாமை தாக்கியது.

யாகி என்று பெயரிடப்பட்ட இந்த கடும் சூறாவளி வியட்நாமை தாக்கியது. புயல் பாதிப்பால் 4 பேர் பலியானதாகவும் 78 பேர் காயமடைந்ததாகவும் வியட்நாம் அதிகாரிகள் கூறினர். வியட்நாமின் வானிலை அதிகாரிகள் கூறும்போது, "கடந்த 10 ஆண்டுகளில் இந்த பிராந்தியத்தை தாக்கிய மிகவும் சக்திவாய்ந்த சூறாவளி இது" என்று தெரிவித்தனர்.

முன்னதாக சீனாவின் தென்பகுதியை தாக்கிய இந்த புயல் காரணமாக அந்த நாட்டில் 3 பேர் பலியாகினர். 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். புயல் காரணமாக வியட்நாம் அரசாங்கம் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டது. வெள்ளம் அல்லது நிலச்சரிவுகளால் பாதிக்கப்படக்கூடியவர் கள் வெளியேற்றப்பட்டனர். தலைநகர் ஹனோய் மற்றும் ஹைபோங் நகரம் உள்ளிட்ட நான்கு இடங்களில் உள்ள விமான நிலையங்கள் மூடப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதய சத்திர சிகிச்சைக்காக 5,000 நோயாளர்கள் காத்திருப்பு

## இறப்பு அதிகரிக்கலாமென மருத்துவர் சங்கம் எச்சரிக்கை!

கொழும்பு, செப். 09

**கொழும்பு தேசிய மருத்துவமனையில் இருதய சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஐயாயிரம் நோயாளிகள் 2028ஆம் ஆண்டு வரை காத்திருப்புப் பட்டியலில் உள்ளனர் என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.**

கொழும்பு தேசிய மருத்துவமனையின் ஐந்து பிரதான விடுதிகளில் இருதய சத்திரசிகிச்சை நிபுணர்களால் மேற்கொள்ளப் படவுள்ள இந்த சத்திரசிகிச்சைகள் தாமதமாவதால் பல நோயாளிகள் இறக்கும் நிலையும் அதிகமுள்ளது என்று மருத்துவ நிபுணர் சமல் சஞ்சீவ கூறியுள்ளார்.

இதய அறுவை சிகிச்சைக்காக தற்போதுள்ள வரிசையை முடிவுக்குக் கொண்டுவர குறைந்தது நான்கு ஆண்டுகள் ஆகும். இதுபோன்று நேரம் கடந்தால், பல நோயாளிகள் உயிரிழக்க நேரிடும். தற்போதைய சூழ்நிலையில் இதய நோயாளிகள் அறுவை சிகிச்சைக்காக தனியாருக்கு செல்லும்போது பெரும் தொகையை செலுத்த வேண்டியிருப்பதால், காத்திருப்போர் பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மற்றும் தேவைப்படுபவர்களுக்கு அரசு உதவி வழங்க வேண்டும்.

இல்லாவிடின் விசேட நோய்களுக்கு செல்லுபடியாகும் வகையில் மருத்துவ காப்புறுதி முறையை மக்களுக்கு அறிமுகப்படுத்துவது இன்றியமையாததாக இருக்கும் என்றும் மருத்துவர் சமல் சஞ்சீவ குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# பரீட்சை நடக்கும் நாளில் பிரசாரங்கள் வேண்டாம்

## பரீட்சைகள் ஆணையாளர் கோரிக்கை

கொழும்பு, செப். 09


புலமைப்பரிசில் பரீட்சை நடக்கும் தினமான எதிர்வரும் 15ஆம் திகதி காலை 9.30 மணி முதல் மதியம் 12.15 மணி வரை கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஒலிபெருக்கி மூலம் நடத்தப்படும் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டாம் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களிடம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கை அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்கப் படவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சை நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்து 849 பரீட்சை நிலையங்களில் எதிர்வரும் 15ஆம் திகதி காலை நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சைக்கு 3 இலட்சத்து 23 ஆயிரத்து 879 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். (ஐ)

# தேசிய மக்கள் சக்தியின் பணிமனை தாக்கப்பட்டது



கண்டி, செப். 09

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பணிமனை தாக்கி உடைக்கப்பட்டுள்ளது. கண்டி - கட்டுகஸ்தோட்டை - உகுரஸ்ஸபிட்டியில் அமைக்கப் பட்ட தேர்தல் பணிமனையே இவ்வாறு உடைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இந்தப் பணிமனை திறக்கப்படுவதற்கு தயார் நிலையில் இருந்த நிலையில் அன்று அதிகாலை இனந்தெரியாத குழு ஒன்று பணிமனையை தாக்கி கதவுகளை அடித்து உடைத்துள்ளதாக கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# ஜனாதிபதி தேர்தல் முடிந்ததும் உள்ளூராட்சி தேர்தல் நடக்கும்!

## தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, செப். 09

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்தவுடன் உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தேர்தலின் பின்னர் பாராளுமன்றம் உடனடியாகக் கலைக்கப் படுமாயின், அதுகுறித்து சிந்திக்க வேண்டியிருக்கும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் அமீர் பாயிஸ் தெரிவித்துள்ளார்.

ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதனிடையே 2023ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் பிற்போடப்பட்டதால் வாக்காளர்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டிருப்பதாகவும் எனவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக் குழு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கடந்த மாதம் உத்தரவு பிறப்பித்தது.

இந்தப் பின்னணியில் இது பற்றிக் கருத்து வெளியிட்ட தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் அமீர் பாயிஸ், உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்தவுடன் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்துவது குறித்து ஆணைக்குழு ஆலோசித்துவருகிறது. தற்போதுவரை அதில் (தேர்தலை நடத்துவதில்) எவ்வித தடங்கல்களும் இல்லை.

எனினும், ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் புதிதாக தெரிவாகும் ஜனாதிபதி உடனடியாக பாராளுமன்றத்தைக் கலைக்கும் பட்சத்தில், அடுத்ததாக பாராளுமன்றத் தேர்தலை நடத்தவேண்டியிருக்கும். அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் குறித்து சிந்திக்க வேண்டியிருக்கும் .

இருப்பினும், அத்தகைய சூழ்நிலையில் முதலில் பாராளுமன்றத் தேர்தலையும் தாமதமின்றி அடுத்ததாக உள்ளூராட்சிமன்றத் தேர்தலையும் நடத்துவது குறித்து ஆணைக் குழு தற்போது ஆராய்ந்து வருகிறது. (ஐ)

# ரூ. 3 கோடி தங்கம் கடத்தியவர் கைது!

கொழும்பு, செப். 09

3 கோடி ரூபாய் பெறுமதியான தங்க பிஸ்கெட்களை கடத்திய இந்திய பிரஜை ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்கா விமான நிலைய குடிவரவு பயணிகள் முனையத்தில் அவரை அதிகாரிகள் சோதனையிட்ட போதே இந்தத் தங்கம் கைப் பற்றப்பட்டது.

கைதான நபர் கடந்த 6ஆம் திகதி சென்னையிலிருந்து வணிகப் பயணியாக வந்து பெங்களூர் திரும்புவதற்காக நேற்று கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு சென்றுள்ளார்.

அவரை சோதனையிட்டபோது, ஒரு கிலோ 158 கிராம் 9 தங்க பிஸ்கெட்களும் மேலும் மூன்று தங்க பிஸ்கெட்களும் கைப்பற்றப்பட்டன. இவற்றை அவர் தனது காற்சட்டையில் மறைத்து வைத்திருந்தார் என்று தெரிவிக்கப் பட்டது. (ஐ)

# வாக்குப்பெட்டி எடுத்து செல்வோருக்கு ஆயுதம் தாங்கிய பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பு, செப். 09

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கு பெட்டிகளை எடுத்துச் செல்லும்போது ஆயுதம் தரித்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் தேர்தல் பணிமனை இது தொடர்பிலான அறிவித்தலை வெளியிட்டுள்ளது. வாக்குப் பெட்டி எடுத்துச் செல்லும் வாகனம் மற்றும் தேர்தல் அதிகாரிகளின் பாதுகாப்புக்கு ஆயுதம் தரித்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவர்.

இந்த வாகனங்களின் முன்னாலும் பின்னாலும் பொலிஸ் வாகனங்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளன. அத்துடன், இந்த பாதுகாப்பு நடவடிக்கைக்கு விசேட அதிரடிப் படையினரின் ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வீசா கட்டுப்பாட்டை நீக்கியது தன்சானியா!

கொழும்பு, செப். 09

20 ஆண்டுகளுக்கும் மேலாக விதிக்கப்பட்டிருந்த இலங்கைக்கான வீசா கட்டுப்பாடுகளை தன்சானியா நீக்கத் தீர்மானித்துள்ளது.

தன்சானியாவின் வீசா பரிந்துரை பட்டியலில் இலங்கை நீக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் கணநாதன் தெரிவித்துள்ளார்.

தற்போது, வர்த்தகர்கள் மற்றும் பயணிகள் தன்சானியாவுக்கு இணையம் வழியாக வீசாவுக்கு விண்ணப்பிக்க முடியும். தன்சானிய அரசாங்கத்துடனான விரிவான உயர்மட்ட பேச்சுகளின் பின்னரே இந்தக் கட்டுப்பாடு நீக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சிமெந்துக்கான செஸ் வரி குறைப்பு

கொழும்பு, செப். 09

இறக்குமதி செய்யப்படும் சிமெந்துக்கு விதிக்கப்பட்ட செஸ் வரி ஒரு கிலோவுக்கு ஒரு ரூபாயால் குறைக்கப்பட்டது.

நிதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரி குறைப்பு கடந்த 06ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மின் இணைப்பு பெறுவதற்கு வரி இலக்கம் கட்டாயமானது

கொழும்பு, செப். 09

புதிதாக மின் இணைப்புகளை பெறுவோர் வரி இலக்கத்தை கட்டாயம் பெறவேண்டும் என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான முன்மொழிவு இந்த ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் முன் வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உள்நாட்டு இறைவரி திணைக் களம் இந்த தீர்மானத்தை எடுத் துள்ளது.

வாகனப் பதிவு, வருமான உரிமம் பெறுதல், நடப்புக் கணக்கு தொடங்குதல், நிலம், அசையாச் சொத்து உள்ளிட்ட சொத்துகளை பெறுதல் போன்ற வழக்குகளில் வரி இலக்கத்தை பெறுவது தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதன்படி மின்சார தேவையைப் பூர்த்தி செய்வது தொடர்பான பரிந்துரை நிதித் திணைக் களத்திடம் சமர்ப்பிக்கப்படும் என்று உள்நாட்டு இறைவரித் திணைக் களம் தெரிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொது...

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்த தலைமையில் பரப்புரைக்கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பொது வேட்பாளர் அரியநேத்திரன் மற்றும் அவரை ஆதரித்து ரெலோ தலைவரும் எம்.பியுமான செல்வம் அடைக்கலநாதன், ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன், வடக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் சிவநேசன், தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் அருண் தம்பிமுத்து, ஜனநாயக போரா ளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், யாழ். மாநகர முன்னாள் மேயர் மணி வண்ணன் ஆகியோர் பங்கேற்று பேசியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வீரர்களின்...

இதனால், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அந்த அணி சகல விக்கெட்களையும் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மகாஜன கல்லூரி அணி சகல விக்கெட்களையும் இழந்து 162 ஓட்டங்களையே பெற்றது.

இதனால், 34 ஓட்டங்கள் முன்னிலையோடு இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதய கல்லூரி 9 விக்கெட்களை இழந்து 150 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தி மகாஜன கல்லூரியை துடுப்பெடுத்தாட அழைத்தது.

இரண்டாவது இன்னிஸில் சிறப்பான தொடக்கத்தை மகாஜன கல்லூரி ஏற்படுத்தியது. ஆரம்ப வீரர்கள் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து, ஆட்டம் நிதான நிலைக்கு திரும்பியது. எனினும், விக்கெட்களும் சீரான இடைவெளியில் விழுந்து கொண்டிருந்தன. இறுதியில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இந்தப் போட்டியில் இரு இன்னிங்ஸ்களிலுமாக 12 விக்கெட்களை வீழ்த்தியதுடன், 34 ஓட்டங்களையும் பெற்ற மகாஜன கல்லூரியின் வீரர் உ. ஜோவெல் றொசான் தெரிவானார். அத்துடன், சிறந்த பந்துவீச்சாளர், சிறந்த சகலதுறை வீரர் விருதுகளையும் இவரே பெற்றார்.

சிறந்த துடுப்பாட்ட வீரராக ஸ்கந்தவரோதய கல்லூரியின் கே. டிலக்சன், சிறந்த களத்தடுப்பாளராக ஸ்கந்தவரோதய கல்லூரியின் எஸ். கேதுசன் ஆகியோர் தெரிவாகினர். (ஐ)

## ஐ.நா...

நிறைவடைகிறது. எனவே, இது விடயத்தில் மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கட்ட நகர்வு தொடர்பிலும் முடிவு எட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையே, ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை கைவிடும்படி இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது என்று தெரிய வருகின்றது. தற்போது நாட்டில் தேர்தல் நடப்பதால் மனித உரிமைகள் விவகாரம் அரசியல் மயமாக்கப்பட்டுவிடும் என்றும் மீண்டெழும் பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படும் எனவும் இலங்கை கூறியுள்ளது.

எனினும், இலங்கை தொடர்பில் புதிய பிரேரணை தொடர்பில் உத்தியோகபூர்வ தகவல் வெளியிடப்படவில்லை. ஆனாலும், இலங்கை தொடர்பில் 'இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தலைப்பில் 51ஆவது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மீண்டும் ஓராண்டுக்கு நீடிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது.

இதேவேளை இலங்கை தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கைக்கு இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலக்க பதிலளித்து உரையாற்றுவார். அவர், விவாதங்கள் மற்றும் பக்க நிகழ்வுகளிலும் பங்குபற்றுவார் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

## போரால்...

மார்ச் 12 இயக்கத்தின் ஏற்பாட்டில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொது விவாதத்தில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விவாதத்தில் பங்கேற்ற அவரிடம் "30 வருட கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நியாயத்தை பெற்றுக் கொடுப்பதற்கும் தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் என்ன?" என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில்,

"யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை பெற்றுக் கொடுக்க பல நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். காணாமல் போனோர் பணி மனையை அமைத்தோம். காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை வெகு விரைவில் நிறைவு செய்ய சட்டத்தால் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். வடக்கு - கிழக்கு மக்களின் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுத்துள்ளேன். நிலையான தீர்வுக்கு உரிய நடவடிக்கைகளை செயல்படுத்துவேன் - என்றும் கூறினார். (ஐ)

## தென்னிலங்கை...

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"சஜித் பிரேமதாஸ ஆயிரம் விகாரைகளை கட்டுவதாகத் தெரிவித்திருக்கின்றார். இந்த நிலையில் ஏதோ ஒரு கட்சி கூறுகின்றது என்பதற்காக நீங்கள் அவருக்கு அளிக்கின்ற வாக்கானது விகாரைகளுக்கு வைக்கின்ற ஒவ்வொரு கல்லாகத்தான் இருக்கும்.

"இதேபோல் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நீங்கள் அளிக்கின்ற வாக்கானது இருக்கின்ற நிலங்களை இன்னும் இழந்து செல்வதாகவே அமையும். ரணில் விக்கிரமசிங்கவே ஒரு கட்ட மைப்பாக - ஒரு தேசமாக - ஓர் இனத்தின் விடுதலைக்காக ஒன்றாக இருந்த எம்மை சிதைத்தார்.

"இதேபோல, அநுரகுமார திஸநாயக்க எமது இணைந்த வடக்கு - கிழக்கைப் பிரித்தவராக இருக்கின்றார். இவ்வாறானவர்களை தென்பகுதியில் இருந்து அழைத்து வந்து மாலை போட்டு - பொன்னாடை போர்த்தி வரவேற்கின்ற ஒரு வெட்கம்கெட்ட சமூகமாக நாம் மாறி வருகின்றோம்.

"பொதுக் கட்டமைப்பின் ஊடாக ஒரு செய்தியை சொல்ல வந்திருக்கிறேனே தவிர, ஜனாதிபதியாக வருவதற்காகவோ - நிறைவேற்று அதிகாரம் கொண்ட அந்தக் கதிரையை தட்டிப் பறிப்பதற்காகவோ இல்லை. ஈழமண்ணில் இழந்த உரிமைகளை மீட்பதற்காகவும் - நாங்கள் நாங்களாகவே இருக்கின்றோம் என்பதை சர்வதேசத்துக்கும் இந்தியாவுக்கும் ஏன் தென்னிலங்கைக்கும் காட்டவே நான் போட்டியிடுகிறேன்.

"வடக்கு - கிழக்கில் ஓர் இனமாக - ஒரு தேசமாக ஒன்றிணைந்த கட்ட மைப்புக்குள் சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வை பெறுவதற்காக எங்களுடைய இனம் ஒன்றிணைந்து தனது ஆதரவை தெரிவிக்கின்றது என்ற செய்தியை நாங்கள் அவர்களுக்கு சொல்ல வேண்டும்.

"தேர்தல் நடைபெறவுள்ள இந்த 13 நாட்களில் பல போலியான செய்திகள் என்னைப் பற்றி வரலாம். இருபதாம் திகதி கூட அரியநேத்திரன் இவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கிறார் அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கிறார் என்ற செய்தி கூட இந்த சமூக வலைத்தளங்களின் ஊடாக வெளிவரலாம். ஆனால், நான் எந்தமாற்றத்துக்கும் உட்படப் போவதில்லை. ஆகவே, நீங்கள் போடுகின்ற புள்ளடியானது எமது இனத்துக்கான புள்ளடி - எமது விடுதலைக்கான புள்ளடி - எமது மண் மீட்புக்கான புள்ளடி என்பதை உணர்ந்து செயல்படுங்கள்", - என்றார். (ஐ)

## தலதா அத்துக்கோரள ரணிலுக்கு ஆதரவு!

கொழும்பு, செப். 09

பாராளுமன்ற உறுப்புரிமையையும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பதவியையும் துறந்த தலதா அத்துக்கோரள ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவு வழங்கியுள்ளார்.



நேற்று ஞாயிற்றுக்கிழமை பதுளை - வெலிமடை நகரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பரப்புரை கூட்டம் நடைபெற்றது. இந்தப் பரப்புரைக்கூட்டத்தில் தலதா அத்துக்கோள பங்கேற்றார்.

2020 ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான தலதா அத்துக்கோரள கடந்த ஓகஸ்ட் 21ஆம் திகதி தனது உறுப்புரிமையை துறந்தார்.

## மட்டக்களப்பு...

வெள்ளைக்காரர் ஆட்சிக்காலம் முதல் பரம்பரையாக அதிகாரத்தை எவ்வாறு பயன்படுத்துவது என எமது மக்கள் சரியாக சிந்தித்து தீர்மானம் எடுத்து வந்துள்ளனர்.

பல சிறந்த அரசியல் தலைவர்கள் கிழக்கில் உருவாகியுள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவை நாம் 6 மாதங்களுக்கு முன்னரே அறிவித்து விட்டோம். எமது மாவட்டத்துக்கான அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முதல்கட்டமாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியை வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

மட்டக்களப்பில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளால் அவரை வெல்ல வைக்க வேண்டும். அதிகாரம் கொண்ட அமைச்சு பதவிகளை இந்த மாவட்டத்தில் உருவாக்க வேண்டும். எமது வளங்களைப் பயன்படுத்தி கிழக்கு மாகாணத்தில் வறுமையை ஒழிக்க வேண்டும்" என்றார். (ஐ)

## தமிழ்...

உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு தேர்தலுக்காக உருவாக்கப்படவில்லை. மக்களின் பலம் இந்த அணிக்கு கிட்டவேண்டும். இது ஆலமரமாக மறா எமது மக்கள் அங்கீகாரம் தரவேண்டும்.

நாம் அனைவரும் ஓர் அணியாக இருந்து செயல்படும் வாய்ப்பு தேர்தலில் ஏற்படுமாக இருந்தால் மக்கள் சக்தியாக ஐ. நா. கதவை தட்ட முடியும். தமிழர்கள் உணர்வோடு இருக்கிறார்கள் என்பதை காட்ட வேண்டும்.

எதிர்வரும் 21ஆம் திகதி நாம் பொது வேட்பாளருக்கு இடும் புள்ளடிகள் வீரப் புள்ளடிகளாக மாற்றப்பட வேண்டும். இந்த கட்டமைப்பு மக்களுக்காகத் தொடர்ந்து போராடும் - என்றார். (ஐ)

## அநுர...

புத்தளம் - சிலாபத்தில் திலித் ஜயவீரவுக்கு ஆதரவாக நடந்த பரப்புரை கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தேசியத்தை பாதுகாப்பதற்காகவே குறுகிய காலத்தில் சர்வஜன சக்தி என்ற புதிய அரசியல் கூட்டணியை ஸ்தாபித்துள்ளோம். ஜனாதிபதித் தேர்தலில் பலர் போட்டியிடுகிறார்கள். ரணில் விக்கிரமசிங்க, அநுரகுமார திஸநாயக்க, சஜித் பிரேமதாஸ ஆகியோரின் கொள்கை பிரகடன உள்ளடக்கம் ஒருமித்ததாக காணப்படுகிறது.

பகிரங்க விவாதம் ஒன்றில் ஈடுபடுவதற்கு ரணில், சஜித், அநுர, நாமல் ஆகியோருக்கு தற்றுணிவு கிடையாது. இவர்களால் எவ்வாறு நாட்டை நிர்வகிக்க முடியும்?

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஒருமித்த நாடு என்பதை முன்னிலைப் படுத்தி தயாரிக்கப்பட்ட புதிய அரசமைப்பை உருவாக்குவதாக அநுரகுமார திஸநாயக்க தனது கொள்கை பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## உலகின்...

நடந்த பரப்புரை கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு சஜித்துக்கும் அநுரவுக்கும் சரியான கொள்கை இல்லை. அவர்கள் பேசிக்கொண்டிப்பதையே செய்கிறார்கள். நாடு எதிர்நோக்கும் சவால்களுக்கு அவர்களிடம் தீர்வுகள் இல்லை. பிரச்னைகள் ஏற்படும்போது ஓடிவிடுகின்றனர்.

2022இல் நான் இந்த பகுதிக்கு வந்தபோது நீண்ட வரிசை இருந்தது. பல பகுதிகளுக்கும் சென்றேன். நீங்கள் அனைவரும் வரிசையில் இருந்தீர்கள். இந்த வரிசை யுகத்தை நிறைவு செய்ய முடிவு செய்தேன்.

2023இல் நான் வரும்போது வரிசைகள் இருக்கவில்லை. விவசாயிகள் என்னிடம் உரம் கேட்டார்கள். அதனை நான் பெற்றுக்கொடுத்தேன். நீங்கள் சிறந்த விளைச்சலை பெற்றுத் தந்தீர்கள். இவ்வாறுதான் நாட்டை முன்னேற்றினோம். நீங்கள் அனைவரும் கஷ்டப்பட்டீர்கள். மீண்டும் அந்த நிலைக்குச் செல்ல வேண்டுமா?

எவ்வாறு முன்னோக்கிச் செல்ல இருக்கிறோம் என்பது இந்தத் தேர்தலிலேயே முடிவாகும். பிரச்னைகள் வந்தபோது மற்ற தலைவர்கள் ஓடுகையில் நான் மட்டுமே முன்வந்தேன். இவர்களை நம்ப முடியுமா? பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு கோரினார்கள். தேர்தலை நடத்த சொன்னார்கள். இவ்வாறு பல நொண்டிச்சாட்டுகளை கூறினார்கள். இவர்கள் கூறியதைப் போன்று 2022இல் தேர்தலை நடத்தியிருந்தால் என்ன நடந்திருக்கும்? பிரச்னை தீருமா? அல்லது சிக்கல் ஏற்படுமா? பங்களாதேஷை போன்று நாடு மாறியிருக்கும்.

சஜித் வந்து மேடைகளில் பேசுகிறார் - பேசுகிறார் பேசிக்கொண்டே இருக்கிறார். எந்தத் தீர்வும் அவரிடமில்லை. இவ்வாறானவர்களால் எவ்வாறு தீர்வு வழங்க முடியும். அடுத்த 5 வருடங்களுக்கு "இயலும் சிறீ லங்கா" திட்டம் எம்மிடமுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் பெண்களுக்குத்தான் அதிக பிரச்னை ஏற்பட்டது? பெண்களின் உரிமைகள் செயல்படுத்தப்படுவதில்லை. பெண்களை வலுவூட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். பெண்கள் வீடுகளில் எதிர்கொள்ளும் வன்முறைகளை தடுக்க சட்ட ஆலோசனை மற்றும் மருத்துவ சேவை நிலையங்களை அமைக்கவுள்ளோம். குடித்து விட்டு வீட்டுக்கு வந்து குழப்பம் செய்யும் ஆண்கள் இனி கவனமாக இருக்க வேண்டிவரும். பெண்களின் மரியாதையைப் பாதுகாக்க வேண்டும்.

இந்தப் பிரதேசத்தை சுற்றுலா வலயமாக முன்னேற்றுவோம். 1977இல் நான் இங்கு வந்த போது தேவநாயகம் அமைச்சராக இருந்தார். நல்லையாவைப் பற்றியும் அறிந்திருந்தேன். எனது தந்தை ஹோட்டலொன்றை ஆரம்பித்தார். அதற்கு அருகில்தான் பிள்ளையானின் கிராமம் இருந்தது. கல்குடாவில் அனைத்து இடங்களுக்கும் சென்று வந்துள்ளேன். வாகரை முதல் காத்தான்குடி வரை பெரும் சுற்றுலா வலயத்தை உருவாக்குவேன். ஹிங்குரக்கொடை விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யவிருக்கிறோம். இப்பகுதிக்கு வர அது இலகுவாக இருக்கும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## உலக தொழில் சந்தைக்கு ஏற்ப எமது கல்வி முறை மாற்றப்படும்

### ஜனாதிபதி வேட்பாளர் நாமல்



பண்டாரவளை, செப். 09

உலக தொழில் சந்தைக்கு ஏற்ற வகையில் எமது நாட்டின் கல்வி முறை மாற்றியமைக்கப்படும் என சிறீ லங்கா பொதுஜன பெரமுன வின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பதுளை, பண்டாரவளை சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெற்ற பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இந்த நாட்டின் எதிர்காலச் சந்ததியினருக்கு சுபீட்சமான உலகைக் கட்டியெழுப்பவே எமது அரசியல் கொள்கைகளை நடைமுறைப்படுத்துகின்றோம்.

இந்த நாட்டில் வியாபாரிகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். இந்த நாட்டின் பொருளாதாரம் கிராமத்தில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளாலேயே கட்டியெழுப்பப்படுகிறது.

அவர்களிடமிருந்து வரிகளை வசூலிப்பதன் மூலம் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வரி விதிக்கப்பட வேண்டும்.

கல்வி முறையில் மாற்றம் வரவேண்டும். உலக வேலைவாய்ப்பு சந்தைக்கு ஏற்றவாறு நம் நாட்டின் கல்வி முறை மாற்றப்பட்டு வருகிறது. நாடு நிலையான பொருளாதார வளர்ச்சியை அடையாமல் சர்வதேச அமைப்பின் தேவைக்கு ஏற்ப வரிகளை விதித்து நாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியாது- என்றார்.(எ)

## வாக்காளர் அட்டையை விநியோகித்த தபால் ஊழியரை தாக்கியவர் கைது!

கொழும்பு, செப். 09

களுத்துறையில் உள்ள தபால் நிலையத்தில் கடமையாற்றும் தபால்காரர், வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கச் சென்ற வேளை நபரொருவரால் தாக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, தாக்கிய நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக களுத்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலில் காயமடைந்த தபால்காரர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் களுத்துறை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

நாமலின் பிரசார கூட்டத்துக்கு

## விளையாட்டு துப்பாக்கியுடன் வந்த இரு இளைஞர்கள் கைது

கொழும்பு, செப். 09

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் வெலிமடை நகரிலுள்ள இந்திராணி திரையரங்கில் நடைபெற்ற பொதுக் கூட்டத்துக்கு விளையாட்டுத் துப்பாக்கியுடன் வந்த இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அம்பகஸ்தோவ பொலிஸார் தெரிவித்தனர்.

ஜனாதிபதி வேட்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தின் பாதுகாப்புக்காக சுற்றுவட்டார பொலிஸ் நிலையங்களின் அதிகாரிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பின் போது, உவபரணகம பிரதேசத்தில் வசிக்கும் பாடசாலை மாணவர் மற்றும் பல்கலைக்கழக மாணவர் சந்திப்பு மண்டபத்துக்குள் நுழைய முற்பட்ட போது, அம்பகஸ்தோவ பொலிஸார் மற்றும் பண்டாரவளை விசேட குற்றத்தடுப்புப் பிரிவினர் சோதனையிட்டனர்.

இளைஞர்களிடம் பிளாஸ்ரிக் கைத்துப்பாக்கி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, அவர்கள் கைது செய்யப்பட்டு வெலிமடை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக அம்பகஸ்தேவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரத்நாயக்க தெரிவித்தார்.

கூட்ட அரங்கில் பெற்றோர்கள் இருந்ததால் தாம் வீடு திரும்புவதாக தெரிவிக்கவே கூட்ட அரங்குக்கு வந்ததாக மாணவர்கள் தங்களிடம் தெரிவித்தனர் என வெலிமடை பொலிஸார் கூறினர். (எ)

# ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்காத அமைச்சர்கள், எம். பிக்களுக்கு நெருக்கடி

## பதவியை பறிக்க வேண்டாம் என்று கோரிக்கை

கொழும்பு, செப். 09

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்காத அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்திலிருந்து விலகிச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த அறிவித்தலை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கும் அமைச்சர்கள் மற்றும் கட்சிகளின் கோரிக்கைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மிக முக்கியமான தருணத்தில் பெயரளவில் ஆளும் கட்சியில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களாக அங்கம் வகிப்ப தில் பயனில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியில் இருந்து கொண்டு கட்சியின் தீர்மானங்கள் குறித்த விவரங்களை ஏனைய தரப்பினருடன் பகிர்ந்து கொள்வ தாக குறித்த அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. எனவே, ஆதரவு வழங்காத தரப்பினரை ஆளும் கட்சியிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மையில் நான்கு இராஜாங்க அமைச்சர்கள் பதவி நீக்கப்பட்டிருந்தனர்.

மேலும், சில அமைச்சர்கள் தங்களை பதவி நீக்க வேண்டாம் எனவும் தாங்களாகவே இராஜினாமா செய்வதாக தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# அரியநேத்திரனுக்கு ஆதரவாக வவுனியாவில் பிரசார கூட்டம்

வவுனியா, செப். 09

தமிழ்ப் பொது வேட்பாளரின் தேர்தல் பிரசார கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா கலைமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது.



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் பா. அரியநேத்திரன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன், வடக்கு மாகாண சபை முன்னாள் விவசாய அமைச்சர் எஸ். சிவநேசன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அருண் தம்பிமுத்து, அரசியல் ஆய்வாளர்களான நிலாந்தன், ஜதீந்திரா, யோதிலிங்கம், தமிழ் அரசு கட்சியின் உறுப்பினர் விமலேஸ்வரி மற்றும் கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

## கம்போடியாவில் பணிபுரிந்த இலங்கை இளைஞன் மரணம்

கொழும்பு, செப். 09

கம்போடியாவில் பணிபுரிந்து வந்த இலங்கை இளைஞன் ஒருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்ததாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

லக்ஷபான பிரதேசத்தை சேர்ந்த 32 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயரமான மாடியில் இருந்து விழுந்து அவர் உயிரிழந்ததாகவும் இது தொடர்பில் அவரது உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

# நோயாளிகள் பாதுகாப்பு திட்டங்களுக்காக மன்னார் மருத்துவமனைக்கு சிறப்பு விருது

கொழும்பு, செப். 09

நோயாளிகள் பாதுகாப்பு சம்பந்தமான செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்திய மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு இரு சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன.

உலக சுகாதார நிறுவனத்தால் வருடாந்தம் அனுஷ்டிக்கப்படும் சர்வதேச நோயாளர் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு சுகாதார அமைச்சின் சுகாதார தரம் மற்றும் பாதுகாப்புப் பணியகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் நடை பெற்றது.



இதன்போதே மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு இரு சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன. நோயாளிகள் பாதுகாப்பு சம்பந்தமான செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்திய மருத்துவமனைகளுக்கு இடையில் நடைபெற்ற போட்டியிலேயே இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

இரு நூற்றுக்கும் மேற்பட்ட மத்திய மற்றும் மாகாண சுகாதார நிறுவனங்களுக்குள் அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற போட்டியில் வடக்கு மாகாணத்தில் இருந்து மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை மாத்திரமே இந்த சிறப்பு விருதை வென்றுள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளர் பாலித மஹிபால, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் அஸாத் எம். ஹனீபா விருதுகளை பெற்றுக்கொண்டார். (எ))

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.